Registered as a Newspaper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

## THE EELANAATHAM

நாதம் 01 பிரமோதூத ஹ சித்திரை மீ 08ஆம் உ சனிக்கிழமை (21 - 04 - 1990) ஹிஜ்ரி 1410 றம்ழான் 24 ஓசை 62

## ஐ. நா. அகதிகள் புனர்வாழ்வு நிதி திரும்பிப் போகும் ஆபத்து?

(முல்லைத்தீவு)

ஐக்கிய நாடுகள் தூதரக அகதிகள் புனர்வாழ்வு நிலையத்தால் தமிழ்ப் பகுதிகளில் ஐந்து மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதி திரும்பிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு பதின்மூவாயிரம் வீடுகள் கட்ட இந்த நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

1988, 1989, 1990 ஆம் ஆண்டுகளுக்குள் இந்த வீடுகள் கட்டப்படவேண்டும். ஆனால் கடந்த கால சூழ்நிலைகள் காரணமாக இவை கட்டப்படவில்லை.

இரண்டாயிரம் வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்த நிதியை மீளப்பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## தேனிசை நிகழ்ச்சியில் யாழ். மக்கள் முன் மாத்தயா பேசுவார்!

(யாழ்ப்பாணம்)

தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி நாளை மறு தினம் திங்கட் கிழமை பிற்பகல் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக மக்கள் முன் தோன்றிப் பேசவிருக்கிறார்.

தமிழீழத்திலிருந்து இந்தியப்படை முற்றாக வெளியேறிய பின் மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்துப் பேசியதுடன், பொதுக்கூட்டங்களிலும் கலந்து கொண்டு மக்கள் முன் தோன்றிப் பேசியிருக்கும் திரு. மகேந்திரராசா (மாத்தயா) எதிர்வரும் திங்கட்கிழமை தான் யாழ்ப்பாணத்தில் பொதுநிகழ்ச்சியையொட்டி, மக்கள் முன் தோன்றிப் பேசவிருக்கிறார்.

தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி திங்கட்கிழமை பிற்பகல் யாழ். முற்றவெளியில், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்ச்சியை யாழ். மாவட்டத் தளபதி பானு ஆரம்பித்து வைக்க, புதுவை இரத்தினதுரை அறிமுகவுரை நிகழ்த்துவார்.



## வெடி போட்டு மீன் பிடித்தல் முற்றாக தடை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து வெடி போட்டு மீன் பிடித்தலுக்கு, விடுதலைப் புலிகள் பூரணமாகத் தடை விதித்துள்ளனர். கடல் வளத்தைப் பேணவும், தொழிலாளர்களின் எதிர்கால நலன் கருதியும் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர். அத்தோடு இதனை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளனர்.

## லொறி தடம் புரண்டுள்ளது

(அக்கரைப்பற்று)

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிச் சீனிமூடைகள் ஏற்றிக் கொண்டு வந்த லொறி ஒன்று மஹஓயாவுக்கு அருகில் பாதையை விட்டு விலகி தடம் புரண்டுள்ளது, சாரதி கடும் காயங்களுக்குள்ளாகி கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். (46)

## தலைவர் பிரபா பாலகுமார் சந்திப்பு

### சந்தேகங்கள் நீங்கியதாக அறிவிப்பு பேச்சுத் தொடருமாம்

(யாழ்ப்பாணம்)

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, ஈரோஸ் இயக்கப் பொதுச்செயலாளரும், ஈழவர் ஜனநாயக முன்னணிச் செயலாளர் நாயகமுமான திரு. வே. பாலகுமாரன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

ஈரோஸ் இயக்கத்தின் மீது, விடுதலைப் புலிகளுக்கு இருந்த சந்தேகம் நீங்கி மீண்டும் சுமுகமான உறவு ஏற்படும் சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும், இப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடரும் எனவும் திரு. பாலகுமாரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரட்ணம் யோகி, ஈரோஸ் எம்.பி. திரு. பரராஜசிங்கம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

ஈரோஸ் இயக்கத்தின் மீது விடுதலைப்புலிகளுக்கு இருந்த சந்தேகம் இப்பேச்சுவார்த்தையின் மூலம் நீங்கி மீண்டும் சுமுக நிலை ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என ஈரோஸ் பிரமுகர் தெரிவித்தார்.

சுமார் இரண்டு மணி நேரமாக நடந்த இப்பேச்சுக்களின் போது தற்போதைய நிலமைகள், அண்மைக் கால நிகழ்வுகள் குறித்து கருத்துப் பரிமாறப்பட்டது.

1987 அக்டோபர் மாதத்துக்குப் பின்னர் தலைவர் பிரபாகரனும் திரு. பாலகுமாரும் இப்போதுதான் முதல் தடவையாக சந்தித்துப் பேசியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவருக்கு மூன்று அம்சக்கோரிக்கைகள் தொடர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நம்பாதவர்களையும் பொய் பிரசாரம் பேதலிக்க வைத்தது

- தேனிசைச் செல்லப்பா



(யாழ்ப்பாணம்)

தலைவர் பிரபாகரன் இற...

நடந்தது. கல்லூரிகள் மூடப்பட்டு முதலமைச்சர் கருணாநிதியை உண்மை செய்தியை...

## ராக்கிங் சேட்டை

(கல்லாறு)

பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெறும் ஆங்கில வகுப்புக்கு வரும் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் மீது சில சிரேஷ்ட மாணவர்கள் ராக்கிங் என்ற பேரில் சேட்டைகள் புரிவதாக புதியமாணவரின் பெற்றோர் புகார் தெரி...

### அமைதிப்படை போகும் முன்னரும் வந்த பின்னரும்


## “வடக்கு கிழக்கு புலிகள் கட்டுப்பாட்டில்தான்”

திருக்கோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்துப் பேசியதுடன், பொதுக்கூட்டங்களிலும் கலந்து கொண்டு மக்கள் முன் தோன்றிப் பேசியிருக்கும் திரு. மகேந்திரராசா (மாத்தயா) எதிர்வரும் திங்கட்கிழமை தான் யாழ்ப்பாணத்தில் பொதுநிகழ்ச்சி இசை நிகழ்ச்சி திங்கட்கிழமை பிற்பகல் யாழ். முற்றவெளியில், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்ச்சியை யாழ். மாவட்டத் தளபதி பானு ஆரம்பித்து வைக்க, புதுவை இரத்தினதுரை அறிமுகவுரை நிகழ்த்துவார்.



# நம்பாதவர்களையும் பொய் பிரசாரம் பேதலிக்க வைத்தது

- தேனிசைச் செல்லப்பா



(யாழ்ப்பாணம்)

தலைவர் பிரபாகரன் இறந்து விட்டதாக இந்திய வானொலியும், தொலைக்காட்சியும் தொடர்ந்து மூன்று நாட்கள் ஒலிபரப்பிய பொய்ச் செய்தியினால் இதனை நம்ப மறுத்தவர்களையும் பிரசாரம் பேதலிக்க வைத்து விட்டது. சென்னை நகரமெங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டன. சாலை மறியல் நடந்தது. கல்லூரிகள் மூடப்பட்டு முதலமைச்சர் கருணாநிதியை உண்மை செய்தியை வெளியிடுமாறு மாணவர்களும் ஆதரவாளர்களும் நெருக்கடி கொடுத்தனர். பெரியர் சிலைக்குமுன்னாக தீக்குளிக்க முனைந்தவர்களைத் பொலிஸார் கைது செய்தனர். ஆனால் நாட்டில் கொந்தளிப்பு இருந்தும் தொலைக்காட்சி தொடர்ந்து பொய்யே கூறியது. ஆனால் இதுவரை இந்திய வானொலியும், தொலைக் காட்சியும் தாம் கூறிய அப்பட்டமான இப் பொய்ச் செய்திக்கு இதுவரை மறுப்பேதும் தெரிவிக்கவில்லை என யாழ்ப்பாணம் வந்துள்ள தேனிசைச் செல்லப்பா ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

மேலும் அவர் ராஜீவ்காந்தி அனுப்பிய இராணுவம் 6000 பொதுமக்களைக் கொன்று குவித்த பின்னும் தமிழ் நாட்டில் நடந்த தேர்தலில் 39 ஆசனங்களில் 38 ஆசனங்களைக் காங்கரஸ் கூட்டணி கைப் பற்றியது. தமிழ் நாட்டில் செத்துப்போன இக் காங்கிரஸ் கட்சிக்கு உயிர் ஊட்டியவர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு மாறி மாறி வந்த திராவிடக்கட்சியினர்.

பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியினர் வெற்றி பெற்றதில் இருந்து தமிழ் நாட்டில் தலைவர் பிரபாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி பக்கம் மக்கள் செல்ல முடியாத நிலை

(தீவுப்பகுதி)

வேலணை கிராமிய ஆஸ்பத்திரிப் பக்கம் மக்கள் செல்லமுடியாத துர்ப்பாக்கியநிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த ஆஸ்பத்திரி சுகாதாரத் தொழிலாளர்களினால் கடந்த பத்து நாட்களாக சுத்தரிக்கப்படாததே இந்த அவல நிலைக்கு காரணமாகும். தினமும் சுத்திகரிக்கப் வேண்டிய இந்த ஆஸ்பத்திரி கடந்த பத்து நாட்களுக்கு மேலாகசுத்திகரிக்கப்படாததனால் துர்நாற்றம் வீசி

(6ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று மணிக்குப் பின் முத்திரைகள் கிடையா!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில் மாலை 3 மணிக்குப் பின்னர் விலை உயர்ந்த முத்திரைகள் வழங்கப்படுவதில்லை.

இங்குள்ள காசாளர் மூன்று மணியுடன் கணக்குகளை முடித்து விடுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது,

இதனால் வெளிநாடுகளுக்கு மாலை மூன்று மணிக்குப் பின்னர் கடிதங்களை, பொதிகளை அனுப்ப வருபவர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்,

முன்னர் ஊரடங்குச்சட்டம், இராணுவ கெடுபிடிகளால் நேரத்துடன் இந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## 10 முச்சக்கர வண்டிகள் மட்டுநகருக்கு வந்துள்ளன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சமூக சேவைகள் அமைச்சினால் நீண்டகால இடைவெளியின் பின்பு 10 முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி வண்டிகள் உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக வழங்கப்படுகின்றன.

களுவாஞ்சிக்குடி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் உதவி அரச அதிபர் திரு, எம். எம். புவனேஸ்வரன் தலைமையிலான வைபவத்தில் திரு. ஞானமுத்து மாணிக்கம், வசந்தராசபிள்ளை நவரெட்ணம் ஆகிய இருவருக்கு வழங்கப்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிச் சீனிமூடைகள் ஏற்றிக் கொண்டு வந்த லொறி ஒன்று மஹஓயாவுக்கு அருகில் பாதையை விட்டு விலகி தடம் புரண்டுள்ளது, சாரதி கடும் காயங்களுக்குள்ளாகி கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். (46)

## ராக்கிங் சேட்டை

(கல்லாறு)

பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெறும் ஆங்கில வகுப்புக்கு வரும் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் மீது சில சிரேஷ்ட மாணவர்கள் ராக்கிங் என்ற பேரில் சேட்டைகள் புரிவதாக புதியமாணவரின் பெற்றோர் புகார் தெரிவிக்கின்றனர். (45)

## ரயில் சேவை பற்றி மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையில் ரயில் சேவையை சீராக்கவும். வீதிகளை அபிவிருத்தி செய்யவும் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் தனியார் பஸ் சேவைகளை விருத்தி செய்யவும் இங்கு ஆராயப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இது மேற்கொள்ளப்பட்டது.

## ஜே. ஆரின் தம்பி எச்.' டபிள்யூ மரணம்

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் சகோதரரான எச். டபிள்யூ ஜெயவர்த்தன தமது74ஆவது வயது வயதில் நேற்றுக்காலை பங்களூரில் காலமானார்.

ஜனாதிபதி சட்டத்தரணியான இவர் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தலைவராகவும் பணிபுரிந்தார்

முன்னாள் ஜனாதிபதியின் பிரதிநிதியாக திம்பு மற்றும் முக்கிய பேச்சுவார்த்தைகளில் இவர் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும் சுமுகமான உறவு ஏற்படும் ... பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடரும் எனவும் திரு. பாலகுமாரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரட்ணம் யோகி, ஈரோஸ் எம்.பி. திரு. பரராஜசிங்கம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

ஈரோஸ் இயக்கத்தின் மீது விடுதலைப்புலிகளுக்கு இருந்த சந்தேகம் இப்பேச்சுவார்த்தையின் மூலம் நீங்கி மீண்டும் சுமுக நிலை ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என ஈரோஸ் பிரமுகர் தெரிவித்தார்.

சுமார் இரண்டு மணி நேரமாக நடந்த இப்பேச்சுக்களின் போது தற்போதைய நிலமைகள், அண்மைக்கால நிகழ்வுகள் குறித்து கருத்துப் பரிமாறப்பட்டது.

1987 அக்டோபர் மாதத்துக்குப் பின்னர் தலைவர் பிரபாகரனும் திரு.பாலகுமாரும் இப்போதுதான் முதல் தடவையாக சந்தித்துப் பேசியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவருக்கு மூன்று அம் சக்கோரிக்கைகள் தொடர்

(6ஆம் பக்கம் பார்க்க)

### அமைதிப்படை போகும் முன்னரும் வந்த பின்னரும்

# "வடக்கு கிழக்கு புலிகள் கட்டுப்பாட்டில்தான்"

- கலைஞர் கருணாநிதி

(சென்னை)

அமைதிப்படை இலங்கைக்குச் செல்வதற்கு முன்னர் தமிழ் பகுதிகளில் வடக்குக் கிழக்கு மாகாணம் விடுதலைப்புலிகள் கட்டுப் பாட்டில் தான் இருந்தது. அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறிய பின்னரும் வடக்குக் கிழக்குப் பகுதிகள் அவர்கள் கையில் வந்துள்ளது. அவர்கள் கேட்கும் ஈழம் கிடைக்குமா, இல்லையா? என்பது வேறுவிடயம்:- இவ்வாறு கலைஞர் மு. கருணாநிதி இந்தியா ருடே பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் ஜனநாயகப் பாதையை ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளார்கள் என்றும் மக்களும் அதனை ஆதரிக்கிறார்கள் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

மேலும் ஒரு கேள்விக்குப்

(6ஆம் பக்கம் பார்க்க)

### தலைமன்னார்

## துறைமுக விருத்தி பற்றி ஆராய இந்திய குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

தலைமன்னார் துறைமுகத்தின் இறங்குதுறையைப் புனரமைப்பது பற்றி வெகுவிரைவில் ஆராய்வதற்கென இந்திய அதிகாரிகள் தலைமன்னாருக்கு வருகை தர உள்ளனர்.

இத்துறைமுக இறங்குதுறை அறுபது அடிக்கு மேல் சேதமடைந்துள்ளதால் இந்தியக் கப்பலான ராமானுஜம் ராமேஸ்வரத்திலிருந்து வந்து தலைமன்னாரில் தரித்து நிற்பதற்கு ஏற்றவகையில் இந்த துறைமுகம் உள்ளதா என்பது

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிறநாட்டுக் கப்பல் கழிவுகள் கடற் பரப்பை அசுத்தமாக்கின

(கொழும்பு)

பிறநாட்டுக் கப்பல்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு எண்ணெய் போன்ற பொருட்களால் நாட்டில் உள்ள நீர்வளத்துக்கும், நீரில் வாழும் உயிரினங்களுக்கும் அபாயம் ஏற்படுமென மத்திய சுற்றாடல் அதிகார சபைத் தலைவர் எச். கே. ஜினதாஸ அறிவித்துள்ளார்.

இவை தொடர்ந்து வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட வேண்டும் எனவும் இல்லையேல் இந்த அபாயம் ஏற்பட்டே தீரும் எனவும் அவர் கூறினார்.

தீவிர கண்காணிப்பும், குற்றம் செய்பவர்களுக்கு அபரா

(6ஆம் பக்கம் பார்க்க)

# காந்தியத்தின் பிறப்பிடத்துக்கே காந்தியம் போதித்தவர் அன்னை

- மன்னார் சுரேஸ்

(மன்னார்)

"காந்தியத்தின் பிறப்புத் தொட்டிலென்று மார்பு தட்டிக்கொள்ளும் பாரத நாட்டிற்கு காந்தியம் என்றால் என்ன என்று கண்முன்னே காட்டியவர் அன்னை பூபதி. வெறிபிடித்த இந்தியப் படைகளுக்கெதிராக எம்வீரர்களும் வீரங்கனைகளும் ஆயுதம் தூக்கி போர்க்கோலம் காட்டிய நேரத்தில் - அகிம்சையை தன் ஆயுதமாக்கி மக்கள் போராட்டத்தை மலரச்செய்தவர் அவர்."

மேற்கண்டவாறு பூநகரி - மாந்தை சிற்றூரவைகள் இணைந்து நடத்திய அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தும் எழுச்சி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. சுரேஸ் குறிப்பிட்டார். அவர் மேலும் அங்கு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

வல்லமைமிக்க வல்லரசான

(6ஆம் பக்கம் பார்க்க)

## கவனருக்காகக் காத்திருந்த கச்சேரி ஊழியர்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநசர சபை ஊழியர்களும் அதிகாரிகளும் வடக்கு கிழக்கு மாகாண சபை கவனரின் வருகைக்காக காத்திருந்து ஏமாந்தனர்.

நேற்று மாலை மூன்று மணியளவில் யாழ். மாநகர சபை அலுவலக ஊழியர்கள் பல

(6ஆம் பக்கம் பார்க்க)

## சகல பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை

- காஸ்ரோ

(அம்பாறை)

"இலங்கை அரசுடனான சகல பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக முன்னுரிமை கொடுக்கின்றோம்."

சம்மாந்துறை பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், உலமாக்கள் சபை உறுப்பினர்கள்,மற்றும் முஸ்லிம் பிரமுகர்கள், தமிழீழ

(6ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna. B/538

பரமேஸ் கோணேஸ் இசைக் குழுவின் முன்னணிப் பாடகர் வின்ரோ மகேந்திரா (சிப்பிரியன்) தொடங்கவிருக்கும் மெல்லிசைக் குழுவிற்கு Drums வாத்தியம் மீட்டுவதில் திறமையுள்ளவர் தேவை உடன் வரவும் 6. நவீனசந்தை மேல்மாடி. யாழ்ப்பாணம். 17 கோவில் வீதி, யாழ்ப்பாணம். (B417)

விற்பனைக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M.G.M 777, K.K.S Road Jaffna (B–867)

கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lochaman சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு சிவப்பு சேவற் குஞ்சுகள் GOLDEN COMET HYLINE BLACK பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய் புதன் கிழமைகளில் முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம். NALLUR FARM CENTRE 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி நல்லூர்.

# நமது நிருபர் நவரெத்தினம்



திரு. நவரத்தினம் அவர்கள் 1930 ம் ஆண்டிலே துன்னாலையில் பிறந்தார். 50 ம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை ஆசிரியராகப் பணியாற்றினார் இறப்பதற்கு இரு நாட்களுக்கு முன்புதான் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றார். ஏழாலை பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்தபோது, பாடசாலைக்கும், சமூகத்துக்கும் அவர் ஆற்றிய தொண்டுகள் பல. ஏழாலைத் தேவாலயத்தின் தனாதிகாரியாக பல வருடங்கள்தொடர்ந்து அருஞ் சேவை செய்தவர். ஓய்வு ஒழிவு இன்றி, எறும்பு போல் எல்லா வேலைகளிலும் உற்சாகத்துடன் வேலை செய்து கொண்டிருப்பார். விடுதலை புலிகள் இயக்கதின் இணையற்ற ஆதரவாளர்களுள் அவரும் ஒருவர் ஈழமுரசுக்கு நிருபராக தொடர்ந்து சேவையாற்றியவர். அவர் எழுதிக் கொடுக்கும் செய்திகளை, அப்படியே அச்சுக்கோப்பதற்கு ஆசிரியர் அனுப்பி விடுவார் அவரது செய்தியறிக்கையில் எதுவித திருத்தமோ மாற்றமோ செய்யத் தேவையிருக்காது என்ற அபரா நம்பிக்கையே இதற்குக்காரணம்.

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் அவர் கொண்டிருந்த அந்நியோன்னியப் பற்று தலைக்கண்டு. சகிக்கமுடியாத, பொறாமை நிறைந்த இனத் துரோகிகள், தேவாலயப் பணத்தை சுன்னாகம் வங்கியில் செலுத்துவதற்கு அவர் சென்ற போது, கோழைத்தனமாக அவரைக் கடத்திச் சென்று படுகொலை செய்தார்கள்.

அவருடைய நெஞ்சுறுதியும் விசுவாசமும், இளஞ்சந்ததியினரால்பின்பற்றப்பட வேண்டிய பண்புளாகும்.

தான் கொண்டிருந்த கொள்கைக்காக, லட்சியத்துக்காக தமது உயிரையே அர்ப்பணித்துத் தியாகஞ் செய்தவர். அமரர் நவரந்தினம் அவர்கள்

இவருடைய பிரிவால் பாதிக்கப்பட்ட மனைவிக்கும் பிள்களுக்கும் ஏனைய உறவினர்கட்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள் என்றும் உரியன.

- ஓர் அன்பர்

# கடற்கரையில் மணல் அள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

நாட்டில் கடற்கரைப்பகுதிகளில் மணல் அள்ளுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கரையோர காதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறு கரையோரங்களில் மணல்அள்ளுவதால் கடல் அரிப்பு ஏற்பட்டு பல இடங்களில் கடல் நீர் உட்புகுந்துள்ளதாக இத் திணைக்கள உயர் அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு விசேட அதிகாரம் வழங்கப் பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

குறிப்பாக தென்பகுதியில் இவ்வாறுமணல் அள்ளுவதால் கரையோரப் பகுதி பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.

## புனரமைப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணக் கல்லூரியின் பிக்னல் ஞாபகார்த்த விளையாட்டரங்கு கடந்தகாலங்களில் இந்தியப் படையினரின் முகாமாக பாவிக்கப்பட்ட போது பாரிய வாகனங்கள் விளையாட்டரங்கை பழுதுபடுத்தியது.

# நகைக்கடை, அடைவுக்கடை

வர்த்தக சங்கம், மட்டக்களப்பு.



தமிழ் இன, மொழி, மண்ணுக்காக
தன் இன்னுயிரையே ஈந்து இறை எய்தி,
எதிர்கால தியாக சந்ததிக்கு வாயில்
திறந்து வழி காட்டிய தாயே பூபதி!
உங்கள் அழியா நினைவில் பங்கெடுத்து
கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்.

(B/798)

உலக பந்தபாசங்களால் கட்டுண்ட,
சாதாரண மக்களால் நினைத்துப் பார்க்க முடியாத
உயர்ந்த தியாகத்தைச் செய்து
வான்வரை உயர்ந்துவிட்ட தாயே!
உங்கள் நினைவாக
எங்கள் கண்ணீர்க் காணிக்கையைச்
செலுத்துகின்றோம்.

# மெற்றாஸ் கபே

41, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

(B/803)

உங்கள் ஆத்மீக சக்தியால்
அடிமை வாழ்வு வாழ்ந்த எம்மை
ஆளும் வாழ்வு வாழ
வழிகாட்டிய தாயே பூபதி!
உங்களுக்கு எங்களின்
ஆயிரம் ஆயிரம் கண்ணீர் அஞ்சலிகள்!

# சக்தி நூல் நிலையம்

53, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

(B/804)


# இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ்

19, 21, திருமலை வீதி, மட்டக்களப்பு



ஆயிரம் ஆண்டுகள் மாண்டாலும் தாயே!
மாண்டிடாது உன் தியாகப் பணி நினைவு
பசிய தமிழ் ஈழம்காண பசிமறந்து உயிர்விட்ட

# அன்னை பூபதிக்கு எமது அஞ்சலிகள்!



யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்ஸர்-யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

கடைசி சில தினங்கள்
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
கொடி பறக்குது
(கலர்)
28.4.90 முதல்
அர்ஜுன் - சீதா
ஏவி.எம்மின்
சங்கர் குரு

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)

## பண்டிகை முற்பணம் கிடைக்கவில்லை

(அம்பாறை)

கல்முனைவீடமைப்புதிணைக்களத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் கடந்த எட்டு வருடங்களாகப் பெற்றுவந்த பண்டிகை முற்பணம் வடக்கு கிழக்கு மாகான அரசு நிருவாகம் வந்த பின்னர் கிடைக்கவில்லையெனப் புகார் கூறுகின்றனர்.

இதனால் பண்டிகைகளைக் கொண்டாட முடியாதுள்ள இவ்வூழியர்கள் கல்முனை சமாதானக்குழுத் தலைவர் திரு. பாண்டியூரனிடம் நேரடியாக முறையிட்டதைத் தொடர்ந்து அவர்

கள் 1930 ம் ஆண்டிலே துன்னாலையில் பிறந்தார். 50 ம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை ஆசிரியராகப் பணியாற்றினார் இறப்பதற்கு இரு நாட்களுக்கு முன்புதான் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றார். ஏழாலை பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்த போது, பாடசாலைக்கும், சமூகத்துக்கும் அவர் ஆற்றிய தொண்டுகள் பல. ஏழாலைத் தேவாலயத்தின் தனாதிகாரியாக பல வருடங்கள்தொடர்ந்து அருஞ் சேவை செய்தவர். ஓய்வு ஒழிவு இன்றி, எறும்பு போல் எல்லா வேலைகளிலும் உற்சாகத்துடன் வேலை செய்து கொண்டிருப்பார். விடுதலை புலிகள் இயக்கதின் இணையற்ற ஆதரவாளர்களுள் அவ

த்தை சுன்னாகம் வங்கியில் செலுத்துவதற்கு அவர் சென்ற போது, கோழைத்தனமாக அவரைக் கடத்திச் சென்று படுகொலை செய்தார்கள்.

அவருடைய நெஞ்சுறுதியும் விசுவாசமும், இளஞ்சந்ததியினரால்பின்பற்றப்பட வேண்டிய பண்புளாகும்.

தான் கொண்டிருந்த கொள்கைக்காக, லட்சியத்துக்காக தமது உயிரையே அர்ப்பணித்துத் தியாகஞ் செய்தவர். அமரர் நவரத்தினம் அவர்கள்

இவருடைய பிரிவால் பாதிக்கப்பட்ட மனைவிக்கும் பிள்களுக்கும் ஏனைய உறவினர்கட்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள் என்றும் உரியன.

- ஓர் அன்பர்


# கம்பியூட்டர் கல்வி



Diploma in Data Processing
and
Computer Programming in
BASIC LANGUAGE

ஆரம்பம்: 21 April 1990 11-00 A. M.

D BASE - III

ஆரம்பம்: 22 April 1990 9-00 A. M.

LOTUS 1-2-3.

ஆரம்பம்: 22 April 1990 9-00 A. M.

WORD PROCESSING

ஆரம்பம்: 22 April 1990 2-00 p. m.

VERBATIM (2S, 2D)
FLOPPY DISES

எம்மிடம் விற்பனைக்குண்டு.

UNICO
COMPUTER CENTRE

No- 5, Power House Road,
2nd Lane, JAFFNA b-806


## ஆனைக்கோட்டையில்

(சுதுமலை)

ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கல நாயகி தேவாலய முன்றலில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் திரு. சங்கர் தலைமையில் அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கானோர் பங்கு கொண்ட இவ்வைபவத்தில் பலர் உரையாற்றினார்கள் கவிதைகளும் பாடப்பட்டன. (19)


19,21, திருமலை வீதி, மட்டக்களப்பு



ஆயிரம் ஆண்டுகள் மாண்டாலும் தாயே!
மாண்டிடாது உன் தியாகப் பணி நினைவு
பசிய தமிழ் ஈழம்காண பசிமறந்து உயிர்விட்ட
அன்னையே!
அமரர் உலகிருந்து பூத்துக்குலுங்கும் தமிழ்
ஈழப் பூங்காவை
நீங்கள் காணத்தான் போகிறீர்கள்

நீங்காத எங்கள் நினைவஞ்சலிகள்
உங்களுக்குச் சமர்ப்பணம்

(B/801)



# எலிபன்ற் கவுஸ்

276, திருமலை வீதி, மட்டக்களப்பு



உண்ணவும் உடுக்கவும், உல்லாச வாழ்வுக்கு கொள்ளைப் பணம் வேண்டியும் வாழ்ந்த கொள்ளையர் கூட்டத் துரோகிகள் மத்தியில் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட தியாகி தாயே பூபதி! பூப்பூவாய்ச் சொரிகின்றோம்.

எங்கள் கண்ணீர் அஞ்சலிகளை

(B/801)



53, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

(B/804)



# அன்னை பூபதிக்கு எமது அஞ்சலிகள்!



சிறைப்பட்டு வதைபட்ட அநுமன் வதைக்கப்பட்ட தன் வாலினாலே எரியூட்டியே அழித்தான் அரக்கர் குலத்தையும் நகரையும் தாயே பூபதி! ஆத்மீகத் தீயினால் உங்களை நீங்களே அழிக்க அத்திகாட்டிக் கொடுக்கும் கும்பலையும், கருங்காலிக் கூட்டத்தையும் நாட்டைவிட்டு நாட்டுக்கு ஒட்டங்காட்டிக்கொண்டே இருக்கிறதே: எப்படி அம்மா உங்கள் தீயின் வெக்கையை எங்கள் கண்ணீர் அஞ்சலி தணிக்கப்போகிறது!

## ஆஞ்சநேயர்
## சீமந்து காட்வெயார்ஸ்

விநியோகஸ்தர்கள்

38 பயனியர் வீதி,
மட்டக்களப்பு

(B.802)


## வசதி குறைந்த பாடசாலைக்கு ஓலைக் கொட்டில்கள்

(ஏறாவூர்)

ஏறாவூர் கொத்தணிப் பாடசாலைகளில் கட்டிட வசதி குறைந்த இரு பாடசாலைகளுக்குத் தற்காலிக ஓலைக்கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

சில அதிபர்கள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருடன் தொடர்பு கொண்டதையடுத்து, ஏறாவூர் கிளைத் தலைவர் ஜனாப். எம். நிவாஸ் அரசியல் பொறுப்பாளர் ஜனாப். சரீம் ஆகியோர் இப் பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை அறிந்து, இவற்றை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்தனர்.

ஏறாவூர் அல் முனிறா பெண்கள் மகாவித்தியாலயம், அல் அஸ்ஹர் வித்தியாலயம் இரண்டுமே இவ்வாறு ஓலைக் கொட்டில் அமைக்கப்பட்ட பாடசாலைகளாகும்.

## பண்டிகை முற்பணம் கிடைக்கவில்லை

(அம்பாறை)

கல்முனைவீடமைப்புதிணைக்களத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் கடந்த எட்டு வருடங்களாகப் பெற்றுவந்த பண்டிகை முற்பணம் வடக்கு கிழக்கு மாகான அரசு நிருவாகம் வந்த பின்னர் கிடைக்கவில்லையெனப் புகார் கூறுகின்றனர்.

இதனால் பண்டிகைகளைக் கொண்டாட முடியாதுள்ள இவ்வூழியர்கள் கல்முனை சமாதானக்குழுத் தலைவர் திரு. பாண்டியூரனிடம் நேரடியாக முறையிட்டதைத் தொடர்ந்து அவர் வடக்கு கிழக்கு மாகாண அரசின் வீடமைப்புத் திணைக்களப் பணிப்பாளருக்கு அவசர தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார். (48)

## வெள்ளிவிழா

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட அல்வாய் தெற்கு பாரதிதாசன் சனசமூக நிலைய வெள்ளி விழாவும் மலர் வெளியீடும் 21ஆம் திகதி நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு நிலையத் தலைவர் திரு. கே. நடராஜா தலைமை தாங்குகிறார். யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

கரவெட்டி பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. இ. ஐயாத்துரை (உதவி அரச அதிபர்) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (25)

## டிப்ளோமா பயிற்சிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமோ பயிற்சி 1989 | 1990 கற்கைநெறிக்கு 79 மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

1989ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கோரப்பட்ட இக்கற்கை நெறிக்கு 198 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுள் அனுமதிப் பரீட்சை மூலம் 79 பேர் தெரிவாகியுள்ளனர்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பதிவு செய்யும் வேலைகள் அடுத்த 11 ந்திகதி அன்று யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

# இந்திய பாக் - மோதலைத்தவிர்க்க வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

## நியூயோர்க்கில் விரைவில் பேச்சுவார்த்தை

(வாஷிங்டன்)
இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் மோதல் நிலையைத் தடுக்கும் நோக்குடன் இந்திய - பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேசுவார்கள் என்ற செய்தி உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவ்விரு நாடுகளின் பிரதம மந்திரிகளும் போர் பற்றி வெளியிட்ட அறிக்கைகளின் பின்னர் இரு அமைச்சர்களும் அதிகார பூர்வமாக சந்திப்பது இதுதான் முதல் தடவை ஆகும்.


இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் குறித்து தமது கருத்து வேற்றுமைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டுமென சோவியத் யூனியன் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் எடுத்தமுயற்சி ஓரளவு வெற்றி அளித்திருக்கிறது என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இருவரும் சேர்ந்து கூட்டறிக்கை ஒன்றை விடுவதுபற்றி இணக்கம் ஏற்பட வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவ்வதிகாரி கூறினார்.

ஆனால் இந்திய வெளியுறவு அமைச்சர், பாகிஸ்தான் காஷ்மீரின் பயங்கரவாதத்திற்கு வழங்கும் ஆதரவு பற்றி மட்டுமேதான் பேச்சுவார்த்தை நடாத்த இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி ஜே.கே.எல்.எஸ். என்று அழைக்கப்படும் அமைப்பின் தலைவர் அமனுல்லாக்கானின் விசாவை அமெரிக்கா ரத்துச் செய்துள்ளது.

அமானுல்லாகானை தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்று அமெரிக்காவை இந்தியா கோரியுள்ளது.




# எரிபொருள் வாங்குவதற்கு நோர்வே செல்கிறார் லித்வேனியப் பிரதமர்

(மொஸ்கோ)
நோர்வேயிலிருந்து எரிபொருள் வாங்குவது தொடர்பான நிலையினை அறிந்து கொள்வதற்காக லித்வேனிய பிரதம மந்திரி திருமதி. கசிமேரா புறன்ஸ்ஸி நோர்வேக்கு செல்கிறார்.

லித்வேனியாவின் சுதந்திர பிரகடனத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முதல் நடவடிக்கையாக சோவியத் யூனியன் எரிவாயு மற்றும் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தும் நேரத்தில் லித்வேனிய பிரதமர் இப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

ஆனால் சோவியத்யூனியன் எரிபொருள் மீது தடையை விதிக்கப்போவதாக எச்சரித்த போதும்இதுவரைஎரிபொருள் விநியோகம் நடைபெற்றுவருகிறது என்று லித்வேனியா அரசு அறிவித்திருக்கிறது.

லித்வேனிய பிரதம மந்திரி கசிமேரா புறன்ஸ்ஸி நோர்வே செல்லும் வழியில் மொஸ்கோ விமான நிலையத்தில் இறங்கியபோது செய்தியாளர்களிடம் சோவியத் அரசின் வினியோகம் தடைஏற்பட்டால் எண்ணெய், பெற்றோல், எரிவாயு கொள்முதல் செய்யும் நோக்கத்துடனேயே தாம் நோர்வே செல்வதாக அவர் தெரிவித்தார்.

ஆனால் வெளிநாட்டில் இருந்து எரிபொருள் ஏற்றுமதி செய்யும்போது எவ்வாறு அந்நியச் செலாவணியை பெறுவது என்பதுபற்றி அவர் கருத்துத் தெரிவிக்கவில்லை.

அதேவேளை அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரிகள் லித்வேனியாவிற்கான எரிபொருள் தடைஏற்பட்டால் அமெரிக்க தரப்பில் இருந்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று நாம் சிந்திப்போம் என்று தெரிவித்தனர்.

## சோவியத்தில் சுதந்திர வர்த்தக வலையம்!

(விளாடிவொஸ்டொக்)
சோவியத் தூர கிழக்குதுறைமுகமான நாக்ஹோடா சுதந்திர வர்த்தக வலையப்பிராந்தியமாகவிரைவில் அமையவுள்ளது.

கடந்த 5 வருடங்களாக சுதந்திரவர்த்தகவலையத்தை நிறுவுவதற்கான வேலைகள் மேற் கொள்ளப் பட்டு வருவதாக இத் துறைமுகம் அமைந்துள்ள நகரத்தின் மேயர் தெரிவித்துள்ளார்.

ஏனைய சோவியத் பசுபிக் பிராந்திய துறைமுகங்களை விடவும் நாக்ஹோடாவில் சுதந்திர வலையத்திற்கான வசதிகள் உள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் கப்பற் போக்குவரத்தின் ஒரு முக்கிய துறை முகமாகவும் ஐரோப்பாவுக்கு சைபீரியா ரயில்வேயினூடாக சரக்குகளைக் கொண்டு செல்லக்கூடிய இடமாகவும் இத் துறைமுகம் அமைந்துள்ளது.

கிழக்குப்பிராந்தியத்தில் மிகவும் ஆழமான துறைமுகமாகவும் இது திகழ்கிறது.

## பல கட்சி ஆட்சி பதவி யேற்றுள்ளது

(காட்மண்டு)
நேபாளத்தில் முதலாவது பல கட்சி அரசு பதவியேற்றுள்ளது. மன்னர் பிரேந்திரா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கட்சி சார்பற்ற முப்பது ஆண்டுகால பஞ்சாயத்து முறை நீங்கி, இப்பல கட்சி முறை ஏற்பட்டுள்ளது. இதன் முதல் பிரதமராக நேபாளக் காங்கிரஸ் கட்சித் தலைவர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் பதவிப் பிரமாணம் செய் துள்ளார்.

அமைச்சர்களை மன்னர் பிரேந்திரா வே நியமிக்க கிருஷ்ண பிரசாத் பட்டாராய் ஒப்புக்கொண்டுள்ளார்.

## கலைஞர்-பட்டீல் காவிரிநீர்பற்றியபேச்சு

(சென்னை)
காவிரி நீர்ப்பங்கீடு சம்பந்தமாக கர்நாடக முதல்வர் வீரேந்திரபட்டீலும் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியும் கடந்தபுதன்சென்னையில் சந்தித்து சுமார் இரண்டரைமணி நேரம்வரை பேசினர்.

## நேபாளத்துடன் இந்தியா நல்லுறவை வளர்க்கும் வி.பி.சிங்.

(டில்லி)
அயல் நாடான நேபாளத்துடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு விரும்பியுள்ளதாக இந்தியா நேற்று அறிவித்துள்ளது.

இந்தியாவின் பொருளாதாரத்தடைகள், நேபாளத்தின் பல கட்சி ஜனநாயகத்தின் வெற்றிக்கு உதவியுள்ளது.

இந்தியப் பிரதம மந்திரி வி.பி.சிங், நேபாளத்தின்புதிய பிரதம மந்திரி கிருஷ்ணப்பிரசாத் பட்டாராய்க்கு செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்

நேபாளம் புதிய யுகம் ஒன்றில் காலடி எடுத்து வைத்துள்ளதென்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கு மிடையில் பாரம்பரிய மாக இருந்துவரும் நெருங்கிய உறவுகள் வளர்ச்சி பெற வேண்டும் என்றும் அவர் தமது கடிதத்தில்குறிப்பிட்டுள்ளார்.

## சிறு போகத்துக்கு நீர் கிடைக்கும்

(முல்லைத்தீவு)
முத்தையன்கட்டு குளத்தில் இருந்து சிறுபோகத்துக்கான தண்ணீர் திறந்து விடப்படும் என்று முத்தையன்கட்டு திட்ட முகாமையாளர் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் நடந்த கூட்டத்தில் நீர்ப்பாசனபொறியியலாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தரும், பயிர்ச் செய்கை உத்தியோகஸ்தர்களும், விவசாயப் போதனாசிரியரும் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (58)

## கட்புல சாதனங்கள் உள்ளூரில் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்யப்படுவதற்கென கட்புல சாதனங்கள். உள்ளூர் தொழில் நுட்பவியலாளர்களின்உதவியுடன் தயாரிக்கப்படவுள்ளன.

இத்தயாரிப்புகள் தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள நிலையத்துடன், யாழ்ப்பாண முறைசாராக் கல்விப் பிரிவும் இணைந்து வடிவமைக்கப்படும் இதில் ஆய்வுகூட உபகரணங்கள், வகுப்பறைச் சாதனங்கள் உட்பட பல பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.

இப்பொருட்களை வடக்கு, கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சு கொள்வனவு செய்து தமிழ்ப்பகுதி பாடசாலைகளுக்கு விநியோகம் செய்யும். (லோ)

## சீனித் தொழிற்சாலையில் தமிழர் நியமனமாக வேண்டும்

(அம்பாறை)
இம்முறை தமிழ் பேசும்

பருத்தித்துறை இலங்கை வங்கியில்

## நிவாரணம் பெறாதவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம்

(பருத்தித்துறை)
பருத்தித்துறை இலங்கை வங்கியில் இதுவரை வழங்கப்பட்டமீளக்குடியமர்தல் நிவாரணம் 2000 ரூபா, தொழில் முயற்சிகள் நன்கொடை 4000 ரூபா (பட்டியலில் இடம் பெற்றவர்கள் மாத்திரம்) பெறாதவர்களுக்கு இந்நிவாரணங்களை வங்கி வழங்குவதற்கு அறிவித்துள்ளது.

இம்மாதம் 27 ஆம், 28ஆம், 29 ஆம் திகதிகளில் வழங்கப்படும் கிராமசேவை அலுவலர் பிரிவுகளின் விபரங்கள் வருமாறு:

27 ஆம் திகதி வல்வெட்டித்துறை வடக்கு, தொண்டமானாறு, பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, கெருடாவில் தெற்கு, அல்வாய் வடக்கு, அல்வாய் தெற்கு.

28 ஆம் திகதி வியாபாரி மூலை, தும்பளை, பருத்தித்துறை, பருத்தித்துறைகிழக்கு, புலோலி கிழக்கு, புலோலி தெற்கு, புலோலி மேற்கு.

29 ஆம் திகதி மந்திகை, வல்லிபுரம், அம்பன், குடத்தனை, குடத்தனை கரையூர், கற்கோவளம், சுண்டிக்குளம், நாகர் கோவில் தெற்கு, நாகர் கோவில் வடக்கு, துன்

மேற் கொள்ளப் பட்டு வருவதாக இத் துறைமுகம் அமைந்துள்ள நகரத்தின் மேயர் தெரிவித்துள்ளார்.

ஏனைய சோவியத் பசுபிக் பிராந்திய துறைமுகங் களை விடவும் நாக்ஹோடாவில் சுதந்திர வலையத்திற்கான வசதிகள் உள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் கப்பற் போக்குவரத்தின் ஒரு முக்கிய துறை முகமாகவும் ஐரோப்பாவுக்கு சைபீரியா ரயில்வேயினூடாக சரக்குகளைக் கொண்டு செல்லக் கூடிய இடமாகவும் இத் துறைமுகம் அமைந்துள்ளது.

கிழக்குப்பிராந்தியத்தில் மிகவும் ஆழமான துறைமுகமாகவும் இது திகழ்கிறது.

## ... பதவி யேற்றுள்ளது

(காட்மண்டு)

நேபாளத்தில் முதலாவது பல கட்சி அரசு பதவியேற்றுள்ளது. மன்னர் பிரேந்திரா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கட்சி சார்பற்ற முப்பது ஆண்டு கால பஞ்சாயத்து முறை நீங்கி, இப்பல கட்சி முறை ஏற்பட்டுள்ளது. இதன் முதல் பிரதமராக நேபாளக் காங்கிரஸ் கட்சித் தலைவர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் பதவிப் பிரமாணம் செய் துள்ளார்.

அமைச்சர்களை மன்னர் பிரேந்திராவே நியமிக்க கிருஷ்ண பிரசாத் பட்டாராய் ஒப்புக்கொண்டுள்ளார்.

...கள் லித்வேனியாவிற்கான எரிபொருள் தடைஏற்பட்டால் அமெரிக்க தரப்பில் இருந்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று நாம் சிந்திப்போம் என்று தெரிவித்தனர்.

## கலைஞர்-பட்டீல் காவிரிநீர்பற்றியபேச்சு

(சென்னை)

காவிரி நீர்ப்பங்கீடு சம்பந்தமாக கர்நாடக முதல்வர் வீரேந்திரபட்டீலும் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியும் கடந்தபுதன்சென்னையில் சந்தித்து சுமார் இரண்டரைமணி நேரம்வரை பேசினர்.

## உள்ளூரில் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்யப்படுவதற்கென கட்புல சாதனங்கள். உள்ளூர் தொழில் நுட்பவியலாளர்களின் உதவியுடன் தயாரிக்கப்படவுள்ளன.

இத்தயாரிப்புகள் தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள நிலையத்துடன், யாழ்ப்பாண முறைசாராக் கல்விப் பிரிவும் இணைந்து வடிவமைக்கப்படும் இதில் ஆய்வுகூட உபகரணங்கள், வகுப்பறைச் சாதனங்கள் உட்பட பல பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.

இப்பொருட்களை வடக்கு, கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சு கொள்வனவு செய்து தமிழ்ப்பகுதி பாடசாலைகளுக்கு விநியோகம் செய்யும். (லோ)

## நிவாரணம் பெறாதவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் இதுவரை வழங்கப்பட்டமீளக்குடியமர்தல் நிவாரணம் 2000 ரூபா, தொழில் முயற்சிகள் நன்கொடை 4000 ரூபா (பட்டியலில் இடம் பெற்றவர்கள் மாத்திரம்) பெறாதவர்களுக்கு இந்நிவாரணங்களை வங்கி வழங்குவதற்கு அறிவித்துள்ளது.

இம்மாதம் 27 ஆம், 28ஆம், 29 ஆம் திகதிகளில் வழங்கப்படும் கிராமசேவை அலுவலர் பிரிவுகளின் விபரங்கள் வருமாறு:

27 ஆம் திகதி வல்வெட்டித்துறை தெற்கு, வல்வெட்டித்துறை வடக்கு, தொண்டமானாறு, பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, கெருடாவில் தெற்கு, அல்வாய் வடக்கு, அல்வாய் தெற்கு.

28 ஆம் திகதி வியாபாரி மூலை, தும்பளை, பருத்தித்துறை, பருத்தித்துறைகிழக்கு, புலோலி கிழக்கு, புலோலி தெற்கு, புலோலி மேற்கு.

29 ஆம் திகதி மந்திகை, வல்லிபுரம், அம்பன், குடத்தனை, குடத்தனை கரையூர், கற்கோவளம், சுண்டிக்குளம், நாகர் கோவில் தெற்கு, நாகர் கோவில் வடக்கு, துன்னாலை வடக்கு. (25)

# கலாசார பேரவையின் புத்தாண்டு பரிசளிப்பு விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவையின் புத்தாண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 25ஆம் திகதி நகரமண்டபத்தில் மேலதிக அரச அதிபர் திரு. ஆர். தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் பிரதம அதிதியாகவும், வட-கிழக்கு மாகாண கலாசார பிரதி பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்கிறார்கள்.

விசேட கருத்துரை ஜனாப் எம். எம். எம். மஃரூப் கரீம் வழங்குகிறார். புத்தாண்டு கவிதைப்போட்டியில் வெற்றி பெற்ற கவிஞர் சு. விஸ்வலிங்கம் (1 ஆம் இடம்), கவிஞர் மு. சோமசுந்தரம் (2 ஆம் இடம்), கவிஞர் வெல்லாவூர் கோபால் (3ஆம் இடம்) ஆகியோருக்கு அன்று பரிசுகள் வழங்கப்படும்.

கல்விமான் க. கணபதிப்பிள்ளைக்கு தத்துவ சிரோன்மணி பட்டமும், வித்துவான் பண்டிதர் வீ. சி. கந்தையாவுக்கு மகாவித்துவான் பட்டமும், திருமதி. கங்கேஸ்வரி கந்தையாவுக்கு இலக்கியமணி பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். (37)

## செயற்கை கை தயாரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். சுண்டிக்குளியில் இயங்கி வரும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தயாரிக்கும் தொழிற்சாலையில் தற்போது செயற்கைக் கைகளும் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## மயானங்கள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

வலிகாமம் வடக்குப் பிரதேச சபைப் பகுதியிலுள்ள சகல மயானங்களையும், சேமக்காலைகளையும் உடனடியாகப் புனரமைக்க, வலி. வடக்கு உதவி அரச அதிபரும், பிரதேச சபை விசேட ஆணையாளருமான திரு. வை. இராசையா நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஒவ்வொரு உப அலுவலக எல்லைக்குள் அமைந்திருக்கும் மயானங்களை இனங்கண்டு, அவற்றில் திருத்த வேலைகள் பற்றிய மாதாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்றும் அவர் பணித்துள்ளார். (25)

# சீனித் தொழிற்சாலையில் தமிழர் நியமனமாக வேண்டும்

(அம்பாறை)

இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தின் ஹிங்குராணைத் தொழிற்சாலையில் இவ்வருடத்திற்கான சீனி உற்பத்தி வேலைகள், வைகாசி மாத முதற் பகுதியில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு வருடா வருடம் ஆரம்பமாகும் உற்பத்தி வேலைகளுக்குப் பெரும்பான்மை இனத்தவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவதுண்டு.

இம்முறை தமிழ்பேசும் தொழிலாளர்கள் சேர்க்கப்பட வேண்டுமென இங்குள்ள பொதுமக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கோரவிருக்கின்றனர்.

தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் பணி இம்மாத இறுதியில் நடைபெறுமென, நிருவாகம் அறிவித்துள்ளது. இதில் சிறுபான்மை மக்களுக்கும்வாய்ப்பளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனப்பொது மக்கள் கோருகின்றனர். (48)

# அப்போதிக்கரிஸ் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகிறது

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டலீக் 'அப்போதிக்கரிஸ்' வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்தும் உதைபந்தாட்ட 'லீக் போட்டி 21-ம் திகதி மீண்டும் ஆரம்பமாகிறது.

யாழ். மாவட்ட கழகங்களிடையே வருடாந்தம் நடாத்தப்படும் மேற்படி போட்டி கடந்தவருடம் நடந்துகொண்டிருக்கையில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் இடை நிறுத்தப்பட்டது.

இப்போட்டியில்சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் சென் நீக்கிலஸ்கழகம் சென்றோக்ஸ் வி. கழகம், குருநகர் யுத்கார் மல் கழகம், பொற்பதி ஐக்கியக் கழகம் யாழ். முஸ்லிம் கழகம் கலைவாணி கழகம், அராலி சில்வர் ஸ்ரார் கழகம், அல்லைப்பிட்டிவிளையாட்டுக் கழகம் ஆகியன பங்கு பற்றுகின்றன.

பாசையூர் சென் அன்ரனிஸ் வி. கழகம், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம், கிறீன்பீல்ட் கழகம் ஆகியன இச் சுற்றுப் போட்டியிலிருந்து விலகிக் கொண்டதாக மேற்படி சங்கத்திற்கு அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இப்போட்டி சம்பந்தமான சகல விபரங்களையும் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இப்போட்டிகளில் திறம்பட விளையாடும் வீரர்கள் யாழ். தெரிவுக் கோஷ்டியை' தெரிவு செய்யும் பயிற்சி முகாம்க்கும் அழைக்கப்பட இருப்பதாகவும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் போட்டிக்குழு செயலாளர் தெரிவித்தார்.

இப் போட்டி பாஷையூர் சென் அன்ரனிஸ்விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறும். (42)

## புங்குடுதீவில் பலத்த மழை

புங்குடுதீவில் நீண்ட கால வரட்சியின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இங்கு பலத்தமழை பெய்துள்ளது.

இரவு மூன்று மணியளவில் இருந்து சுமார் அரை மணி நேரமாக இம்மழை பெய்தது

## நூல்வெளியீடு

(களுவாஞ்சிக்குடி)

திருகோணமலையைச் சேர்ந்த திருமதி. ந. பாலேஸ்வரியின் 'உள்ளத்தின் உள்ளே' என்ற நாவல் 'உதயம்' வெளியீட்டு நிறுவனத்தின் ஐந்தாவது நாவலாக மட்டக்களப்பு உதயம் அலுவலகத்தில் வைபவரீதியாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்விழாவில் மட்டக்களப்பு கச்சேரி தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. இரா. நாகலிங்கமும் கலந்து கொண்டார். (45)

# நெடுந்தீவு பகுதி மக்களின் அஞ்சலியும் கூட்டமும்

(நெடுந்தீவு)

''தமிழின விடுதலைப் போராட்டப் பாதையில் அன்னை பூபதியின் தியாக மரணம் பெண்களின் போராட்ட உணர்வுக்கு உரமிட்டது. தமிழீழ மீட்புக்குப் பாவையரின் பங்கு உறுதியையும் உத்வேகத்தையும் வழங்க அன்னையின் துணிந்த போராட்டம் வழிகாட்டி நிற்கிறது.''

இவ்வாறு நெடுந்தீவு மத்தியில் இடம் பெற்ற தியாகி, அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்திற் கலந்து கொண்டு பேசிய தீவுப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியற் பொறுப்பாளர் திரு. வீ. காஸ்ரோ கூறினார்.

திருமதி. மேரி திரேசா பசுபதி தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. ஏ. டபிள்யூ. அரியநாயகம் திரு. நா. சங்கரப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

அன்னை பூபதிக்கு நெடுந்தீவின் பல இடங்களிலும் அன்றையதினம் உண்ணா விரதம் அனுஷ்டிக்கப் பட்டதுடன் ஊர்வலங்களும் நடாத்தப்பட்டன.

## அன்னையர் முன்னணி அன்பளிப்பு

அன்னை பூபதி நினைவாக யாழ். அன்னையர் முன்னணியினர் கைதடி செவிப்புலன் கட்புலன் இழந்தோர் பாடசாலைக்கு இரண்டாயிரம் ரூபாவை ஒரு நாள் மதிய உணவுக்காக அன்பளிப்பு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு

# பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் சேகரிப்பு

(காத்தான்குடி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் புள்ளிவிபரமான மூல ஆய்வுக் கணக்கீடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர்கள், யுவதிகள் விபரம், விதவைகள் குடும்ப விபரம், அநாதைகள், அங்கவீனர்கள் விபரம் முதலான பாதிப்புக்குள்ளானவர்களைப் பற்றியும், இக்கணக்கெடுப்பின் மூலம் குடும்பநிலை விபரம் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான விசேட மதிப்பீட்டு விபரப்படிவங்கள் சமூக சேவைகள் திணைக்களப் பகுதியினரால் சகல கிராமசேவையாளர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56)

# பன்றிகளிலிருந்து பாதுகாக்க மயானத்தைச் சுற்றி மதில்

(ஏறாவூர்)

ஏறாவூர் பகுதியில் கட்டாக்காலிகளாக திரியும் பன்றிகள் முஸ்லிம்களின் மையவாடிகளை சேதப்படுத்தி வருவதையடுத்து இங்குள்ள வாளியப்பா ஹபுரடிச் சுற்றாடலில் சுற்றுமதில் கட்டப்படவுள்ளது.

இப்பகுதி முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளிடம் விடுத்த கோரிக்கையை தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை இதற்கான அத்திவாரக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் ஏறாவூர் பகுதி தலைவர் ஜனாப் எம். நவாஸ், அரசியல் பொறுப்பாளர் ஜனாப் எம். ஐ. சரீப்ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

# மே தினத்தில் மாணவர்களின் வாத்தியக் கோஷ்டிக்குத் தடை

(கொழும்பு)

எதிர்வரும் மேதின ஊர்வலங்களில் எந்தவொரு பாடசாலை மாணவர்களின் வாத்தியக் கோஷ்டியும்கலந்துகொள்ளக்கூடாது என ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

இது சம்பந்தமான ஜனாதிபதியின் அறிவிப்பு சகல தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## முல்லைத்தீவுப் பகுதியில் வண்டில்சவாரிப் போட்டி

(முல்லைத்தீவு)

கடந்த ஆறு வருடங்களின் பின் முதன்முதலாக மாட்டு வண்டில் சவாரிப் போட்டி முள்ளியவளை, தண்ணீரூற்று வற்றாப்பளை, குமுழமுனைப் பகுதிகளில் புதுவருடதினம் மாலையில் நந்திக்கடல் வெளி மைதானத்தில்நடைபெற்றது.

அன்னை பூபதியின் இரண்டாண்டு நினைவையொட்டி நடத்தப்பட்ட புதுவருட விளையாட்டுப் போட்டியில் அதிகாலை 60 மைல் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் மு. சிவனொளி முதலாம் இடத்தையும், செ. ரவீந்திரன் இரண்டாம் இடத்தையும், செ. நியாஸ் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

தொடர்ந்து மாலையில் நடந்த இரட்டை மாட்டு வண்டில் சவாரிப் போட்டியில் க. பாலசுந்தரம் முதலாம் இடத்தினையும், அ. சிவநாதன் இரண்டாம் இடத்தினையும், வ. பாலசுப்பிரமணியம் மூன்றாம் இடத்தினையும் பெற்றனர்.

## காரைதீவில் கலாசார விளையாட்டு விழா

(காரைதீவு)

தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு காரைதீவு உதவி ஆணையாளர் அனுசரணையுடன் கலாசார விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுகிழமை காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதிகளாக விடுதலைப் புலிகள் காரைதீவுப் பொறுப்பாளர் ந.தங்கவேல்மற்றும் முன்னாள் காரைதீவு உதவி ஆணையாளர் போன்றோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதில் மைதான நிகழ்ச்சிகள் சுவட்டு நிகழ்ச்சிகள் என்பன மிகசிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக விடுதலைப் புலிகள் காரைதீவு பொறுப்பாளர் ந.தங்கவேல் முன்னாள் உதவி அதிபர் அருட்சிவம் என்பவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன

## சுங்க திணைக்களத்தை வழமைக்கு கொண்டுவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள சுங்க நிர்வாகத்தை வழமைக்கு கொண்டுவரும் முகமாக இம் மாதம் இருபதாம் திகதியிலிருந்து பல திட்டங்களை இலங்கை சுங்கத்திணைக்களம் அமுலுக்கு எடுத்துள்ளது.

இதில் கடற்பிராந்தியத்தில் பிடிபடும் கடத்தல்களை விசாரிக்க வென விசேட சுங்க தடுப்பு பகுதி அமைத்தல் வன் செயல்களில் சேதமடைந்த பழைய சுங்க திணைக்கள கட்டிடங்களுக்குபதிலாக புதிய கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளுதல்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள சுங்க கட்டுப்பாடு மையங்களுக்கு புதிய பொறுப்பதிகாரிகளை நியமித்தல், பற்றிய நடவடிக்கைகள் முழு மூச்சுடன் நடைபெற்று வருவதாக சுங்க திணைக்கள அதிகாரி திரு. கணநாதலிங்கம் தெரிவித்தார்.

## காத்தான்குடியில்இம்முறை விசேட மத வழிபாடு

(காத்தான்குடி)

காத்தான் குடிபிரதேச முஸ்லிம் பள்ளிவாசல்கள் பலவற்றிலும் அருமை பத்று ஸஹாபாக்களின் நினைவாக விசேட மதவழிபாட்டு நிகழ்ச்சிகள் வாசல்களிலும் எடுத்தோதப்பட்டன

பத்று யுத்தம் நடைபெற்ற தளத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட புனிதக் கல் ஒன்று காத்தான் குடி பத்திரியாய

## பதுளைபஸ்சேவையை ஆரம்பிக்கவும்

(காத்தான்குடி)

அண்மைக்கால வன்செயல் சம்பவங்கள் காரணமாக இடைநிறுத்தப்பட்ட பதுளை-காத்தான்குடி பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமென பிரயாணிகள் பலரும் விரும்புகின்றனர்.

தற்போது மட்டக்களப்பில் இருந்து ஒரு பஸ் வண்டியும், பதுளையில் இருந்து மட்டக்களப்பு வரை ஒரு பஸ் வண்டியுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் பிரயாணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதுடன் தனியார் வாகனங்களில் கூடுதல் பணம் கொடுத்தும் பிரயாணம் செய்கின்றனர்.


முன்னரைப் போல் காலையில் காத்தான்குடியிலிருந்தும் ஒரு பஸ் சேவையை ஆரம்பித்தால் இத்தகைய அசௌகரியங்கள் நீங்கும் என பொது மக்கள் கேட்கின்றனர். (55

## ஊக்குவிப்பு அலவன்ஸ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிராந்திய தொலைத்தொடர்பு திணைக்கள ஊழியர்களுக்கு 50 வீத ஊக்குவிப்பு அலவன்ஸ் இம் மாத சம்பளத்துடன் வழங்கப்பட்டது.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம் :

6-10-1965

வீரமரணம் :

22-04-1987

**லெப். கிர்மானி**

**(யோன்சன் - பேட்டன்)**

நிகழ்வுகளின் நினைவுகளில்
நிதமும் உன் நினைவு
நித்தம், நித்தம் எமை வதைக்கும் - உன்
நினைவுகள் என்றுமே அழியாது!
நீ நேசித்த தேசமும்
நினது காலடிகளும் — இன்றும்
நிழல்களின் மறைவில் நிஜமாய்!

உனது பிரிவால் துயருறும்,
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

குருநகர். (B/416)


வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக

❋ கடிதங்கள் ❋ பார்சல்கள் ❋ தஸ்தாவேஜுக்கள்

ஆகியவற்றை அனுப்ப
உடன் தொடர்பு கொள்ளுங்கள்

**D.H.L INTERNATIONAL LTD.**

**C/o Cosmos Marketing Services Ltd.**
**337, Kasturiyar Road,**
**JAFFNA.**

(B- 744)


## ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்

(நல்லூர்)

நல்லூர் தொகுதி ஓய்வூதிய நலன்புரிச் சங்க எட்டாவது வருட பொதுக்கூட்டம் திரு. வே. செல்லையா தலைமையில் 223ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இராசநாயகம் படிப்பகத்தில் நடைபெறவுள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆறுமுகம் பஞ்சலிங்கம்**

பிறப்பு 5-3-1947 இறப்பு 2-5-1989

திதி 22- 04- 1990

குடும்பத்தில் பெருவிளக்கை
ஏற்றி வைத்தாய்
சட்டென்று சதிகாரர்
அணைத்தார்கள்
கதையும் சரித்திரமாய்
முடிந்தது
உத்தமனின் நினைவால்
என்றென்றும் வாடும்
குடும்பத்தினர்

13/3 2ஆம் பண்ணை
கனகபுரம் கிளிநொச்சி. (R/419)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்



இதில் கடற்பிராந்தியத்தில் பிடிபடும் கடத்தல்களை விசாரிக்க வென விசேட சுங்க தடுப்பு பகுதி அமைத்தல் வன் செயல்களில் சேதமடைந்த பழைய சுங்க திணைக் பதிகாரிகளை நியமித்தல், பற்றிய நடவடிக்கைகள் முழு மூச்சுடன் நடைபெற்று வருவதாக சுங்க திணைக்கள அதிகாரி திரு. கணநாதலிங்கம் தெரிவித்தார்.

## காத்தான்குடியில்இம்முறை விசேட மத வழிபாடு

(காத்தான்குடி)

காத்தான் குடிபிரதேச முஸ்லிம் பள்ளிவாசல்கள் பலவற்றிலும்அருமை பத்று ஸஹாபாக்களின் நினைவாக விசேட மதவழிபாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இஸ்லாம் பரவிய ஆரம்ப காலகட்டத்தில் நடைபெற்ற பத்றுயுத்தத்தில் கலந்து கொண்ட நபித் தோழர்களின் புகழ்சரிதைகள் பாடல்கள் மூலமாகவும், பேச்சு மூலமாகவும் சங்கைக்குரிய உலமாப் பெருமக்களால் சகல பள்ளி வாசல்களிலும் எடுத்தோதப்பட்டன

பத்று யுத்தம் நடைபெற்ற தளத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட புனிதக் கல் ஒன்று காத்தான் குடி பத்திரியாயஜும் ஆப் பள்ளி வாசலில் ஜமாஅத்தார்களின் தரிசனத்துக்காகவைக்கட்பட்டிருந்தது

அகில இலங்கை இஸ்லாமிய மெஞ்ஞானப் பேரவையின் தேசியத் தலைவர் மௌலவி அல்ஹாஜ் ஏ. அப்துர் றவூப் பின் (மிஸ்பாஹி)விசேட துவா பிரார்த்தனையுடன் இக்கல் ''அல்வலிய்யுல் காமில்'' அப்துல் ஜவாத்பெரியஆலிம்(வலி) அவர்களின் ஸியாரமுன்றலில் வைக்கப்பட்டது.

பெருந்திரளான பக்தர்கள் இக்கல்லை முத்தமிட்டு பத்றுத் தோழர்களின்பரிந்துரைக்காகஇறைஞ்சினர். (56)

## கசிப்புக்காரருக்கு எச்சரிக்கை

(முள்ளியவளை)

தண்ணீரூற்று, முள்ளியவளை கிராமங்களில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவர் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மக்களை அழிக்கும் இந்தத் தொழிலை செய்ய வேண்டாம் என அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## அரவம் தீண்டி மரணம்

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலையைச் சேர்ந்த முருகேசு குகநாதன் என்னும் சிறுவன் அரவம் தீண்டி மரணமானார்.

இவர் வந்தாறுமூலை சிறிமகாவிஷ்ணு வித்தியாலய மாணவன் ஆவார், (29)

## பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி

(உரும்பராய்)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின்இலங்கைக் கிளையினரால் 22 ஆம்திகதி யன்று நடத்த விருந்த பேச்சுப்போட்டியும்கட்டுரைப்போட்டியும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை9.00 மணிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகள் யாவும் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் போட்டிகள் அகில இலங்கை ரீதியில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (32


உடன் தொடர்பு கொள்ளுங்கள்

**D.H.L INTERNATIONAL LTD.**

C/o Cosmos Marketing Services Ltd.
337, Kasturiyar Road,
JAFFNA.

(B- 744)


கிளிநொச்சி, கச்சேரி,

## கேள்வி கோரும் அறிவித்தல்

கிளிநொச்சிக் கச்சேரி, திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் கீழ்க் காட்டப்படும் கட்டிட வேலைக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1990 ஆம் ஆண்டு, மே மாதம் 07 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து தேவைப்படும் பதிவுத்தொகை மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம், மீளப்பெறமுடியாத கொடுப்பனவு ஆகியன கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல | வேலை விபரம் | தேவைப்படும் பதிவுத்தொகை ரூபா | மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம் ரூபா | மீளப்பெறமுடியாத கொடுப்பனவு ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கிளிநொச்சி கச்சேரி பெண் ஊழியர்களுக்கான விடுதி அமைத்தல் | 800, 000. 00 | 500/- | 250/- |

இவ் வேலைக்குரிய கேள்விப் பத்திரப் படிவங்களை மீளப்பெறக் கூடியதும், மீளப் பெறமுடியாததுமான தொகைகளைச் செலுத்தி 1990 . 04. 30 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கே. மாணிக்கவாசகர்
திணைக்களக் கேள்விச் சபை, தலைவரும்.
மாவட்ட ஆணையாளரும், அரசாங்க அதிபரும்.
கிளிநொச்சி மாவட்டம்.

(B/786)

முடிந்தது
உத்தமனின் நினைவால்
என்றென்றும் வாடும்
குடும்பத்தினர்

13/3 2ஆம் பண்ணை
கனகபுரம் கிளிநொச்சி.

(R/419)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்

18-02-1964

தாயக மண்ணில்

16-04.1989

திதி: 21-04-90

செல்வன்

கந்தசாமிப்பிள்ளை சாந்திநிகேதன்
(லலித்)

ஆண்டொன்று சென்றதுவே லலித் ஐயா!
உன் நினைவென்றும் அகலவில்லையே
வீரத்திருமகனே வீட்டிற்கும் விடிவு தேடி
வேங்கையோடும் உன் வாழ்வு கண்டாய்
வீணர்கள் கண்ணில் பட்டதுவே உன்மேனி
பொன்னான உன்னுயிரை துடிதுடித்திழுத்தாயே
உன்னுடல் சிதறிய இடத்தில் செந்நிறம் மாறிவிட்டது
என்றென்றும் எம் இதயங்களில்
உன்னுருவம் அழியாத ஓவியம்
சாந்திநிகேதா நின் ஆத்மா நற் சாந்தி
அடைக! அடைக!! நற் சாந்தி!!!

பேரிழப்பால் துயருறும்,
அம்மா, அக்கா, அத்தான்,
உறவினர்கள்.

குலனையூர்,
அராலி வடக்கு.

(R-638)


## இடம் மாற்ற அறிவித்தல்

ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம் 3ஆம் இலக்கத்தில் ( ரகுநாதன் பதிப்பகத்தில் ) இயங்கி வந்த

# ஹாஜீ அப்பாசன்

(பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்) என்னும் வியாபார ஸ்தாபனம்
20. 4. 1990 வெள்ளி முதல்

இல. 06 நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்தில் இயங்கும் என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்

எம் ஒ உவைஸ்

(B/805)

### சிந்தனைக்கு

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும்

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 21 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்குப்போதிய நிதி கிடைப்பதில்லை என்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் குறைப்பட்டிருக்கிறார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமாக நடைபெற்ற மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகள்பற்றிக் குறிப்பிட்டு இவ்வேலைகளைச் செய்து முடிப்பதற்குப் போதிய நிதி கிடைப்பதில்லை என்று குறைப்பட்டிருக்கிறார் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர்.

பல பகுதிகளிலுமிருந்து பல தரப்பட்ட மக்கள் சென்று குடியேறி காடுகளை அழித்துக் கழனிகளாக்கியதே இன்றைய கிளிநொச்சி மாவட்டம்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த கிளிநொச்சி அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி தனி மாவட்டமாக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது.

தனி மாவட்டமான பின்னரும் கிளிநொச்சி எதிர்பார்த்த அளவுக்கு அபிவிருத்தியடையவில்லை.

கிளிநொச்சி மாவட்டம் வளர்ச்சியடைந்துவரும் மாவட்டமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சியில் அமைகின்றது. கவின்கலைக் கல்லூரி கிளிநொச்சியில் அமைந்துள்ளது.

வன்னிப்பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பு இனிக் கிளிநொச்சி மாவட்டத்தில்தான் தங்கியிருக்குமென்று எதிர்பார்க்கலாம். அத்தோடு குடாநாடும் உணவில் தங்கியிருக்கின்றது.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தி வேலைகள் நன்கு திட்டமிட்டு மாதிரி (மொடல்) மாவட்டமாக உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

# 1990 - புலிகளின் வருடம்

## அரபுப் பத்திரிகையாளர் கணிப்பு!

ஸ்ரீலங்காவில் 1990-இல் சிங்களத் தீவிரவாத இயக்கமான ஜனதா விமுக்திப் பெரமுனையின் பயணம் முடிவடைவதோடு, தமிழ்ப் போராளி அமைப்புகளில் சக்தி வாய்ந்த கௌரவமிக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் சகாப்தம் உருவாகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்வையும் மதிப்பையும் வேறெங்கும் இல்லாதபடி யாழ்ப்பாணத் தீபகற்பத்தில்தான் காணக்கூடியதாக இருக்கிறது. 1990-ஆம் ஆண்டைப் புலிகளின் வருடமென்றால் அது மிகையாகாது. யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை யாழ்ப்பாணமெயில் புகை வண்டியில் ஒருவரால் உணர்ந்துகொள்ள முடியும்.

மூன்று வருட இடை நிறுத்தத்திற்குப் பிறகு கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான புகையிரதச்சேவை ஆரம்பித்த இரண்டாம் நாள், நான் இரவு மெயில் புகை வண்டியில் எனது யாழ்ப்பாணப் பிரயாணத்தை மேற்கொண்டேன். ஒவ்வொரு ரெயில் பெட்டியிலும் ஒரு தமிழ்இளைஞனின் படம் கீழே ஏதோ எழுத்துக்களுடன் காணப்பட்டது.

படம் அதில் என்ன செய்தி எழுதப்பட்டிருக்கிறது என்பது குறித்துச் சகபிரயாணி ஒருவரிடம் விசாரித்தேன்.

அப்படம் தமிழரின் உரிமைக்காக சாகும்வரை உண்ணாவிரதமிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இளைஞரான திலீபனின்படம் என்று பதில் கிடைத்தது.

மத்திய அரசுக்குச் சொந்தமான ரெயில் பெட்டிகளில் தமிழ்ப் பிரிவினைவாதி ஒருவரைப் போற்றும் படத்தை ஒட்டுவது சிங்களவரின் உணர்வைப் பாதியாதா? ஆனால், யாழ்ப்பாண மெயில் புகையிரதம் யாழ்பாணமாகவே இருந்தது. முற்று முழுதாக யாழ்ப்பாணத்தார். புகையிரதத்தில் சிற்றுண்டிச்சாலைக்குச் செல்வதென்றால் ஏழு எட்டுப் பெட்டிகளைத்தாண்டித்தான் போயாகவேண்டும். எனது சிங்கள நண்பர், அவர் மனைவி அவர்கள் பிள்ளைகள் இருபதையிட்டுச் சந்தோஷப்பட்டார்கள்.

பொதுவாகத்தமிழர்களைப் பற்றியும் குறிப்பாகவிடுதலை புலிகளைப் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எமது சிங்கள நண்பர்களிடம் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் வினாவினார்கள். தாம் சிங்களவருக்கு எதிராளிகள் அல்லவென்றும் தங்களது உரிமைகளுக்காக அரசாங்கத்துடன் போராடுவதாகவும், இதைச் சிங்களவர்களுக்கு விளக்கும்படியும் கூறினார்கள்.

### புலிகளின் பின் அமைதி

கொழும்பில், பிரயாண முகவர் நிலையத்துடன் யாழ்ப்பாணத்துக்கு காரில் பிரயாணம் மேற்கொள்ளலாமா என்பதுபற்றி விசாரணை செய்தேன். இலங்கைக்காசில் ரூபா 15000/- கேட்டார்கள். கார் வாடகை அதிகமில்லைத்தான். வாடகைக் கார்காரர்கள் தாம் யாழ்ப்பாணம் வர விரும்புவதாகவும், அங்கு ஏதாவது சங்கடம் ஏதும் நடக்காமல் பாதுகாப்புக்கு உத்தரவாதம் யார் என்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் வயோதிபரான ஒரு ஹொட்டல் தொழிலாளியுடன் உரையாடும்போது மேற்கூறிய விடயத்தையும் பிரஸ்தாபித்தார்.

முட்டாள்தனமான பேச்சு என்று பதிலளித்த ஹொட்டல் தொழிலாளி ''விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைப் பொறுப்பேற்ற பின் யாழ்ப்பாணத்தில் எல்லாம் அமைதியாக நடைபெறுகிறது. ஏழு வருடங்களுக்குப் பிறகு நாம் உண்மையான சமாதானத்தை அனுபவிக்கின்றோம்'' என்றார்.

இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தைவிட்டுவெளியேறியபிறகு விடுதலைப்புலிகள் யாழ். நகரத்துக்குள் பிரவேசித்தார்கள். வடமராட்சியில் கடைசியாக நிலைகொண்டிருந்த இந்திய இராணுவம் பெப்ரவரி நடுப்பகுதியில் யாழ்ப்பாண தீபகற்பத்தை விட்டு வெளியேறியது. சிறுபான்மையினராக வாழும் தமிழர்களுக்கு வடக்கிலும் கிழக்...

சகல வழிகளிலும் முயற்சித்தார்கள்.

இன்று யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் விடுதலைப் புலிகளின் காரியாலயங்கள் காணப்படுகின்றன. யாழ்நகரத்துக்கு வெளியிலும் அப்படித்தான். விடுதலைப் புலிகளின் இராணுவ முகாம்கள், அரசியல் அலுவலகங்கள், மாணவர் அமைப்புக்கள், மகளிர் நிறுவனங்கள் எல்லாவற்றையும் யாழ்ப்பாணத்தில் காணக்கூடியதாக இருக்கிறது. மேற்படி நிறுவனங்களெல்லாம் றேடியோத் தொடர்புச் சாதனங்களால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகப் புலிக்கொடி எங்கும் பறந்து கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணம் ஒரு புலிகள் பிரதேசம் என்பதைக் காட்டுவதுபோல் விடுதலைப் புலிப் போராளிகளான இளைஞரும், யுவதிகளும் யாழ்ப்பாண வீதிகளில் நடமாடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. போராளிகள் ஏ. கே. 47, றொக்கட் லோஞ்சேர்ஸ், இயந்திரத் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், கிறனேட்டுகள் ஆகியவைகள் சகிதம் காணப்படுகின்றனர். சில சமயங்களில் அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் வைத்திருப்பவர்களை விடப் பெரிதாகக் காணப்படுகிறது. ஸ்ரீலங்கா இராணுவத்துடனும், இந்திய இராணுவத்துடனும் போராடி உயிரை மாய்த்த தியாகிகளின் படங்களைத் தாங்கிய சுவரொட்டிகள் எங்கும் பரவலாகக் காணப்படுகின்றன. உயிரை இழந்த போராளிகள் தியாகிகள் வரிசையில் வைத்துக் கணிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்கு எம்மை இட்டுச் செல்லும் புகையிரதப் பாதையும், வீதியும் ஆனையிறவு என்றழைக்கப்படும் ஒரு ஒடுங்கிய சிறிய பிரதேசத்தை ஊடறுத்துச் செல்கிறது.

### வல்வெட்டித்துறைப் படுகொலைகள்

ஸ்ரீலங்காவும் இந்தியாவும் சமாதான உடன்பாட்டை 1987 ஜுலை மாதம் கைச்சாத்திட்ட பிறகுதான் இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைத்தார்கள். அதற்கு முன்பு யாழ்ப்பாணத் தீபகற்பம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. இந்திய அமைதிப் படையுடன் மேற்கொண்ட யுத்தத்தினால் யாழ்ப்பாண மக்கள் யுத்தத்தினால் ஏற்பட்ட தாக்கங்களை நன்குணர்ந்துள்ளார். கள். இலங்கையில் எந்தப் பகுதியில் வாழ்பவர்களும் யாழ்ப்பாணத்து மக்களைப் போல் யுத்தத்தின் அனர்த்தங்களை அனுபவித்திருக்கமாட்டார்கள். இந்திய அமைதிப் படை நிலைகொண்டிருந்த 2 வருடம் 7 மாதங்களில் அவர்கள் பொழிந்த குண்டு மாரிகள், பீரங்கித் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள், நேரடிச் சண்டைகளைப்பற்றி மக்கள் மனதில் நீறுபூத்த நெருப்புப்போல் பதிந்துள்ளன. கடற்கரையை அடுத்துள்ள ஒரு கிராமமான வல்வெட்டித்துறையில்தான் விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனும், ஓரிரு தலைவர்களினதும் பிறப்பிடமாகும். ரோந்து சென்றுகொண்டிருந்த இந்திய சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் ஒளித்திருந்து தாக்கியதால் ஆறு சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன், பலர் காயங்களுக்குள்ளானார்கள். ஆத்திரமடைந்த இந்திய ஜவான்கள் வல்வெட்டித்துறையில் படுகொலைகள் செய்தார்கள். நிராயுதபாணிகளான 52 குடிமக்கள் கொல்லப்பட்டனர். 150 வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். விடுதலைப் புலிகள் தலைவர்களின் கருத்துப்படி, ஒன்றுமறியாத மக்களைக் கொல்லும் படைகள் (Innocent People Klling Forces – IPKF) யாழ். குடாநாட்டில் வடமராட்சியில்தான் அதிமான மக்களைக் கொன்று குவித்துள்ளார்கள். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையிலான சண்டைகளில் சாதாரண மக்கள் 6,000 பேர்வரை இறந்துள்ளார்கள். (தொடரும்)

- அறாப் நியூஸ் -

## கல்விக் காரியாலயத்தின் கெடு பிடி ஏன்?

ஆசிரியர்

ஈழநாதம்,

மாவட்டங்களுக்கிடையிலான அதிபர்கள் பொது இடமாற்றத்திற்கமைய அவர்கள் விரும்பிய பாடசாலை அட்டவணைப்படியே விடுவிக்கப்...

முறையீடு செய்தமையால் 3 மாதப்படி மட்டும்வழங்கப்பட்டது. மிகுதி 6 மாத அதிபர்படி இன்னமும் வழங்கப்படவில்லை.

எனது கஷ்ட நிலையை உணர்ந்த கல்விப் பணிப்பாளரால் 15/6/88 இல் எனது விருப்பப் பாடசாலையாகிய யா/குடத்...

## ஊர்சுற்றி

### எழுதுவது

முந்தாநாள் எழுச்சி நாள் விழாவையொட்டி 'ஈழநாதம்' அதிக பக்கங்களுடன் சிறப்பு மலராக வெளிவந்தது. இம்மலருடன் தலைவர் பிரபாகரனும் பிரதித்தலைவர் மகேந்திரராஜா (மாத்தயா) வும் நிற்கும் வண்ணப் படம் இலவசமாக இணைக்கப்பட்டிருந்தது.

வழமையாக அச்சடிக்கும் பிரதிகளை விட மும்மடங்கு பிரதிகள் அச்சிடப்பட்டன. பக்கங்களும் அதிகம்; பத்திரிகைப் பிரதிகளும்அதிகம்.

பத்திரிகைகளை மடித்து இலவச இணைப்புப் படத்தையும் கசங்காமல் அதனுள் வைத்து அனுப்புவது சுலபமான வேலையல்ல.

இரவிரவாகப் பலரும் கண்விழித்து இதைச் செய்து முடித்தாலும் சில இடங்களுக்குப் பத்திரிகை போய்ச் சேருவதற்கு காலை பத்து மணிக்கு மேலாகி விட்டது.

போட்டி போட்டு மக்கள் பத்திரிகையை வாங்கினார்கள். 'ஈழநாதம்' விற்பனையாளர்கள்பலர் மீண்டும் மீண்டும் வந்து...

தனி மாவட்டமான பின்னரும் கிளிநொச்சி எதிர்பார்த்த அளவுக்கு அபிவிருத்தியடையவில்லை.

கிளிநொச்சி மாவட்டம் வளர்ச்சியடைந்துவரும் மாவட்டமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சியில் அமைகின்றது. கவின்கலைக் கல்லூரி கிளிநொச்சியில் அமைந்துள்ளது.

வன்னிப்பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பு இனிக் கிளிநொச்சி மாவட்டத்திலேதான் தங்கியிருக்குமென்று எதிர்பார்க்கலாம். அத்தோடு குடாநாடும் உணவில் தங்கியிருக்கின்றது.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தி வேலைகள் நன்கு திட்டமிட்டு மாதிரி (மொடல்) மாவட்டமாக உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

வெளிநாட்டு நிறுவனங்கள் பல வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு உதவியளிக்கத் தயாராக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிதி உதவியைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் வடபகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் சில எம். பிக்கள் பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானத்தைத் திருத்தவும் சில சிறிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும் நிதி ஒதுக்குவதை ஒரு வருடத்துக்குத் தள்ளிவைத்து கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒரு வருட நிதி முழுவதையும் ஒதுக்கலாம்.

வெளிநாடுகளிலுள்ள தமிழர்களிடமிருந்தும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கென நிதி திரட்டுவதும் பயன்தரக்கூடிய வழியாகும்.

இவையெல்லாவற்றையும்விட வடக்கு கிழக்கு மாகாணசபை இயங்கினாலே கிளிநொச்சி மாவட்டம் மட்டுமல்ல இதர மாவட்டங்களையும் முன்னேற்ற முடியுமென்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

செயல்படாமலிருக்கும் வடக்கு மாகாண சபையைக் கலைத்து விரைவில் புதிய தேர்தல் நடத்த வேண்டியதும் மிக மிக அவசியமும் அவசரமுமாகும்.

அப்படம் தமிழரின் உரிமைக்காக சாகும்வரை உண்ணாவிரதமிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இளைஞரான திலீபனின்படம் என்று பதில் கிடைத்தது.

மத்திய அரசுக்குச் சொந்தமான ரெயில் பெட்டிகளில் தமிழ்ப் பிரிவினைவாதி ஒருவரைப் போற்றும் படத்தை ஒட்டுவது சிங்களவரின் உணர்வைப் பாதியாதா? ஆனால், யாழ்ப்பாண மெயில் புகையிரதம் யாழ்பாணமாகவே இருந்தது. முற்று முழுதாக யாழ்ப்பாணத்தார். புகையிரதத்தில் சிற்றுண்டிச்சாலைக்குச் செல்வதென்றால் ஏழு எட்டுப் பெட்டிகளைத்தாண்டித்தான் போயாகவேண்டும். எனது சிங்கள நண்பர், அவர் மனைவி அவர்கள் பிள்ளைகள் இருவரைத் தவிர ஒரு சிங்களவரின் முகத்தைக்கூடப் புகைவண்டியில் காணமுடியவில்லை அச்சமயம்யாழ்ப்பாணத்தைப் பற்றிக் குழப்பமான செய்திகள் வந்துகொண்டிருந்தன. எனவே நான் யாழ்ப்பாணத்துக்குத் தனிமையாகச் செல்லக்கூடாது என்பதற்காக சிங்களக் குடும்பத்தினர் என்னுடன் உதவிக்கு வந்தனர். இவர்களில் யாழ். விஜயத்தைப் புலிகளும் வரவேற்றார்கள். பிற்பாடு நாங்கள் விடுதலைப் புலிகள் தலைமைக் காரியாலயத்துக்குச் சென்ற சமயம் விடுதலைப் புலிகள் தலைவர்கள் சிங்களக் குடும்பம் தங்கள் மத்தியில் இருப்

என்று பதிலளித்த ஹொட்டல் தொழிலாளி ''விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைப் பொறுப்பேற்ற பின் யாழ்ப்பாணத்தில் எல்லாம் அமைதியாக நடைபெறுகிறது. ஏழு வருடங்களுக்குப் பிறகு நாம் உண்மையான சமாதானத்தை அனுபவிக்கின்றோம்'' என்றார்.

இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தைவிட்டுவெளியேறியபிறகு விடுதலைப்புலிகள் யாழ். நகரத்துக்குள் பிரவேசித்தார்கள். வடமராட்சியில் கடைசியாக நிலைகொண்டிருந்த இந்திய இராணுவம் பெப்ரவரி நடுப்பகுதியில் யாழ்ப்பாண தீபகற்பத்தை விட்டு வெளியேறியது. சிறுபான்மையினராக வாழும் தமிழர்களுக்கு வடக்கிலும் கிழக்கிலும் ஒரு சுயாட்சிப்பிரதேசத்தை அமைப்பதற்காக ஸ்ரீலங்காஇராணுவத்துடனும் இந்திய இராணுவத்துடனும் விடுதலைப் புலிகள் நடாத்திய போரினால் ஏற்பட்ட வடுக்களை விடுதலைப் போராட்டத்தின பிறப்பிடமான யாழ்ப்பாணத்தில் இன்னும் காணக்கூடியதாகவிருக்கிறது. சமாதான உடன்பாட்டைச் செயற்படுத்தும் நோக்குடன், இலங்கை அரசின் அழைப்பை ஏற்று இந்திய அமைதிப்படை 1987இல் வடக்கிற்கும் கிழக்கிற்கும் வந்தது. விடுதலைப் புலிகள் உடன்பாட்டை ஏற்றுக் கொள்ள மறுத்து, உடன்பாட்டைக் குலைப்பதற்கு

...துடனும் போராடி உயிரை மாய்த்த தியாகிகளின் படங்களைத் தாங்கிய சுவரொட்டிகள் எங்கும் பரவலாகக் காணப்படுகின்றன. உயிரை இழந்த போராளிகள் தியாகிகள் வரிசையில் வைத்துக் கணிக்கப்படுகின்றனர்.

கரனும், ஓரிரு தலைவர்களினதும் பிறப்பிடமாகும். ரோந்து சென்றுகொண்டிருந்த இந்திய சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் ஒளித்திருந்து தாக்கியதால் ஆறு சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன், பலர் காயங்களுக்குள்ளானார்

# கல்விக் காரியாலயத்தின் கெடு பிடி ஏன்?

ஆசிரியர்

ஈழநாதம்,

மாவட்டங்களுக்கிடையிலான அதிபர்கள் பொது இடமாற்றத்திற்கமைய அவர்கள் விரும்பிய பாடசாலை அட்டவணைப்படியே விடுவிக்கப்பட்டனர். அதன்படி வவுனியா மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டவடமராட்சி கோட்டப்பிரிவுக்கு15.9.87இல் மாற்றப் பட்டபோது எனது முதல் விருப்பப் பாடசாலையாகிய யா/குடத்தனை அ.த.க. வித்தியாலயம் நிரந்தர அதிபர் இல்லாத நிலையிலும் தரமறுக்கப்பட்டமையால் சாவகச்சேரி வட்டாரப் பிரிவில் உள்ள யா/கரம்பைஅ.மி.த.க வித்தியாலயத்தைபொறுப்பேற்றேன்அப் பாடசாலையில் தொடர்ந்து அதிபர் படி வழங்கப் பட வில்லை. இது தொடர்பாக கணக்காளருக்குப்பல முறைஅறிவித்தும் பலன் கிடைக்காத நிலையில் கல்விப் பணிப்பாளருக்கு முறையீடு செய்தமையால் 3 மாதப்படி மட்டும்வழங்கப்பட்டது. மிகுதி 6 மாத அதிபர்படி இன்னமும் வழங்கப்படவில்லை.

எனது கஷ்ட நிலையை உணர்ந்த கல்விப் பணிப்பாளரால் 15/6/88 இல் எனது விருப்பப் பாடசாலையாகிய யா/குடத்தனை அரசினர் த.க.வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டேன். 15/9/87ல் வவுனியா மாவட்டத்திலிருந்து யாழ்மாவட்டத்திற்கு மாற்றப்பட்ட போது அம்மாதமே வழங்கப்பட்ட சம்பள விபரம்அனுப்பப்பட்டது. ஆனால் 15.6.88ல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ளவடமராட்சிக் கோட்டப் பிரிவுக்கு மாற்றம் பெற்ற போது வழங்கப் பட்ட சம்பள விபரம் அனுப்ப 3 மாதங்கள் சென்றன. அம்மூன்று மாதமும் நிரந்தர அதிபர் பதவியிலுள்ளஎனக்கு 625/- சம்பளம் வழங்கப்பட்டது. இன்று வரை வழங்கப் பட்ட சம்பள விபரம்எனக்குக் கிடைக்கவில்லை.

1989 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட மதிய போசனத்திற்குரிய பணம் எனது சம்பளத்திற் வெட்டப் படுகிறது. 1990ம் ஆண்டிற்குரிய முற்பணமும் வழங்கப் படவில்லை.

வழங்கப் பட்ட மதியபோசனத்திற்குரிய வவுச்சர், பற்றுச்சீட்டுக்கள் முற்பண வவுச்சர் யாவும் பதிவு அஞ்சல் மூலமே அனுப்பப்பட்டது. இது தொடர்பாகபலகடிதங்கள்சாதாரண தபால் மூலமும் பதிவு அஞ்சல் மூலமும் கோட்டக்கல்வி அலுவலகம் மூலமும் அனுப்பப் பட்டும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை. ஆனால் எனது சம்பளம் மட்டும் மாசி மாதம் தொடக்கம் தொடர்ந்து ஒரு சதமேனும்வழங்காது வெட்டப்படுகிறது. இதனால் எனதுகுடும்பம்பெரிதும்பாதிப்படைகிறது. ஆகவே இதற்குரிய அதிகாரிகள் நீதி வழங்க மாட்டார்களா?

உண்மையுள்ள
கெ. வேணுகோபாலு
குடத்தனை

...கைப் பிரதிகளும்அதிகம்.

பத்திரிகைகளை மடித்து இலவச இணைப்புப் படத்தையும் கசங்காமல் அதனுள் வைத்து அனுப்புவது சுலபமான வேலையல்ல.

இரவிரவாகப் பலரும் கண்விழித்து இதைச் செய்து முடித்தாலும் சில இடங்களுக்குப் பத்திரிகை போய்ச் சேருவதற்கு காலை பத்து மணிக்கு மேலாகி விட்டது.

போட்டி போட்டு மக்கள் பத்திரிகையை வாங்கினார்கள். 'ஈழநாதம்' விற்பனையாளர்கள்பலர் மீண்டும் மீண்டும் வந்து மேலதிக பிரதிகள் கேட்டனர். ஏமாற்றத்துடன் அவர்கள் திரும்ப வேண்டியதாயிற்று!

சில விற்பனையாளர்கள் வண்ணப்படங்களை தனியாக எடுத்துவைத்து விட்டு பத்திரிகைகளை விற்றதாகவும் எமக்குப் புகார்கிடைத்திருக்கிறது.

நேற்றும் பலர் வந்து முதல் நாள் பத்திரிகையின் பிரதியைக் கேட்டனர்.

''மன்னிக்கவும் வருந்துகிறோம்'' என்று சொன்னோம்.

அவர்கள்விட்ட பாடாக இல்லை. சில இளைஞர்கள் தலைவரின் வண்ணப்படம் தாருங்கள். பிறேம் போட்டு வீட்டில் மாட்டுவதற்கு என்று அழுங்குப்பிடிபிடிக்கிறார்கள்!

காலத்தை தவற விட்டால் பின் வருந்த நேரிடும்!

★ ★ ★

காரை நகரில் சட்ட விரோத சாராயத் தொழிற்சாலையொன்று பிடிபட்டிருக்கிறது.

சமீபத்தில் கொழும்புக் கோட்டையில் ரயில் நிலையத்திற்கு முன்பாக இதே போன்று பெரிய சாராயத்தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது.

கொழும்புக் கோட்டைக்கும் காரைநகருக்கும் தொடர்பிருக்குமோ?

# திறமையற்ற ஆசிரியர்கள் தரம் குறைக்கப்படவுள்ளனர்

## அமைச்சர் லலித் தகவல்

(கொழும்பு)

கடமை உணர்ச்சியுடன் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கவும் திறமையற்ற விதத்தில் செயலாற்றும் ஆசிரியர்களை தரக்குறைப்பு செய்யவும் கல்வி உயர்கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது.

இந்த விஷயம் சம்பந்தமாக ஆசிரியர் சமூகத்திடமிருந்து கருத்துக்களை அமைச்சு பெற்றுக் கொள்ளும் என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறினார்.

அரசாங்க சேவைகள் தொழில் சங்க சம்மேளனமும் தேசிய கல்வித்துறை ஊழியர் சங்கமும் இணைந்து நடாத்திய கூட்டத்தில் அங்கத்தவர்கள் முன்னிலையில் அமைச்சர் உரையாற்றினார்.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆசிரியர் சங்கங்களின் கருத்துகளை அறிவதற்கென இந்தக் கூட்டம் நடைபெற்றது.

பல பிரச்சினைகள் சம்பந்தமான கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. தொழிற் சங்கங்களின் பல கோரிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டன.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஆசிரியர் விடுமுறைகளில் செல்லும் பொழுது அவர்களின் இடங்களில் கடமையாற்றுவதற்கென ஒவ்வொரு பிராந்திய கல்வி அதிகாரிகள் பிரிவிலும் உப ஆசிரியர் பிரிவொன்றை அமைத்திருப்பதாக தெரிவித்தார்.

அரசாங்க சேவைகள் தொழிற்சங்க சமாசத் தலைவர் அங்கு கருத்து வெவியிடுகையில் மாணவர்கள் அனைவரையும் தரமானபாடசாலைகளில் சேர்ப்பதில் கஷ்டமாக உள்ளது என்று சொன்னார். ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் சகல வசதிகளையும் கொண்ட மாடசாலை அமைக்கப்பட வேண்டும் என்றார்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒவ்வொரு தரமான பாடசாலையினை அமைப்பதன் மூலம் இருபத்தையாயிரம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலைகளில் போதிய இடவசதி காணப்படுமானால் ஐம்பதாயிரம் மாணவர்களை தாம் சேர்த்துக் கொள்வதற்கு தாம் தயாராக உள்ளதாக அமைச்சர் அத்துலக் முதலி தெரிவித்தார்.

# அல்லைப்பிட்டியில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கவிஞர் சத்தியசீலன் எழுதிய 17 சிறுவர் நூல்களையும் இந்நூல்களுக்காக ஓவியர் ரமணி தீட்டிய ஓவியங்களையும் கொண்ட றோட்டறிச் சித்திரபுத்தகக் கண்காட்சி இறுப்பிட்டி றோட்டறிக் கிராமியக்குழுவின் ஆதரவுடன்அல்லைப்பிட்டி, பராசக்தி வித்தியாசாலையில் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் ஆரம்பமாகும்.

அத்துடன் சத்தியசீலன் வானொலி, ரூபவாகினிக்கென எழுதிய தமிழ் பாடல்களும், காட்சிப்பாங்கான முறையில் சத்தியசீலனின் பத்திரிகைப் பாடல் நறுக்குகளும் மஹாகவி சத்தியசீலனுக்குத் தன் கைப்பட எழுதிய கடிதங்களும் காட்சியில் இடம் பெறும்.

ஈழநாதம்

## புனரமைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட புனரமைப்பு குழுக்கூட்டம் நாளை இருபத்திரெண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு முப்பது மணியளவில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் வட பகுதிக்கு விஜயம் செய்துள்ள கவனர் நளின் செனவரத்தினவும் பங்குபற்றுவார். என தெரியவருகிறது. (லோ)

## தந்திக்கம்பி திருடர் நால்வர் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

தொலைத் தொடர்புகள் சேவைகளைச் சீர் குலைக்க தந்திக் கம்பிகளை வெட்டி விற்கும் கோஷ்டியினர் பொதுமக்களின் தகவல்களையடுத்து நேற்று பிடிபட்டனர்.

நேற்றுமாலை யாழ். திறந்த வெளியரங்குக்கு அருகில் நால்வர் இவ்வாறு கம்பிகளை வெட்டிக் கொண்டிருக்கும் போது பொதுமக்களின் தகவல்களை யடுத்து தொலைத் தொடர்புகள் திணைக்கள ஊழியர்களால் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

இவர்கள் இவற்றை கிலோ நாற்பத்தைந்து ரூபாவுக்கு இங்குள்ள ஒருகடைக்கு விற்று வருவதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

தாம் சம்பளத்துக்கே இதனைச் செய்து வருவதாகவும் குறிப்பிட்ட ஒருவர் தான் இந்த வேலையில் ஈடுபடுவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோல பொதுமக்கள் ஒத்துளைப்பு தந்தால் தொலைத் தொடர்புகள் சீராக நடைபெறும் என்று தொலைத் தொடர்பு திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

# 'ஈழநாதம்' ஆசிரியர் தலையங்கம்; போக்குவரத்து சபைத்தலைவர் விளக்கம்; ஆசிரியரின் குறிப்பு!

தங்களது 90-04-20ந் திகதிய பத்திரிகை வெளியீட்டில் கொண்டாட்டம் அல்ல சேவையே தேவை என்று தீட்டப்பட்ட தங்களது ஆசிரியர் தலையங்கம் சம்பந்தமாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் நிலைமையைச் சுட்டிக்காட்டவேண்டியது அவசியமாகின்றது. 1990-04-09ந் திகதியன்று குடாநாட்டில் வெளியாகின்ற பத்திரிகை நிருபர்களை அழைத்து எமது சபை குறித்த நிலைமைகளை நிருபர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தோம், இது சம்பந்தமாக செய்திகளும் உங்கள் பத்திரிகை உட்பட சகல பத்திரிகைகளிலும் வெளிவந்தது. நீங்கள் அறிந்தே

எமது சபைக்கு எமது சபையைச் சார்ந்த ஏழு சாலைகளுக்கும் மக்களின் தேவையைப் பூரணப்படுத்துவதற்கு 260 பேருந்துக்கள் தேவைப்படுகின்றது. இவ் எண்ணிக்கை குறைந்த பட்சதேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாகும். தற்போது இச்சாலைகளில் 160 பேருந்துக்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. 1988, 1989 ஆகிய காலப் பகுதிகளில் எமது சாலைகளுக்கு 78 புதிய பேருந்துக்கள் கிடைக்கப்பெற்றன இவ் 78 பேருந்துக்களையும் தவிர ஏனைய பேருந்துக்கள் 20 வருடத்திற்குக் கூடுதலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பேருந்துக்களாகும். இவைகளின் உதிரிப்பாகங்கள் தேய்வடைந்து, பதிலீடு செய்ய முடியாத நிலைமையில் எம்மாலான திருத்தங்களைமேற்கொண்டு இப்பேருந்துக்கள் மக்கள் சேவைக்கு ஈடுபடுத்தப்படுகின்றன. இப்பேருந்துக்கள் அடிக்கடி பழுதடைவதன் காரணமாக சேவைகள் தடைப்படுவது எமது சக்திக்கு அப்பாற்பட்டதாகும்.

காலை புகையிரத தபால் சேவைக்கும், நண்பகல்யாழ்சேவைக்கும் இணைப்புச்சேவைகள்அட்டவணையிடப்பட்டு செயலாற்றப் படுகின்றது. புகையிரதங்கள் தாமதமாகப் புகையிரத நிலையத்தை அடையும்போது யாழ் நிலைய அதிபர் யாழ் பேருந்து நிலையத்திற்குப் பேருந்துத் தேவைகள் சம்பந்தமாக தொடர்பு கொள்கின்றார். உடனடியாகத் தேவையான பேருந்துகள் புகையிரத சேவைக்கு அனுப்பப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் பேருந்துகள் ரயர்கள் தேவை காரணமாகப் பேருந்துக்கள் சேவையில் ஈடுபடுத்த முடியாமல் நிறுத்தப்பட்டிருந்தன இதன் முக்கிய காரணம் எமது சபைக்குத் தேவையான ரயர்களை களனி ரயர் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாமையே. தற்பொழுது நிலைமை ஓரளவு சீரடைந்திருந்தாலும், முற்று முழுதாகச் சீர்பெறவில்லை, பேருந்து பற்றாக்குறை காரணமாகச் சில முக்கிய சேவைக்குத் தனி இடங்களுக்கான சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. தங்களின் ஆசிரியர் தலையங்கத்தில் ''பஸ்கள்'' இல்லை என்று சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியகாரணமல்ல. என்று குறிப்பிட்டிருப்பது பொருத்தமற்றது, என்பதை வலியுறுத்தவிரும்புகிறேன், எமது சபையால் திட்டமிட்டு அட்டவணையிடப்பட்டுள்ள சேவைகளுக்குத் தேவையான பேருந்துகள் எம்மிடம் இருந்தால் மக்களின் தேவைகள் பூரணப்படுத்தப்பட முடியும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மக்களின் கவனத்திற்காகவும், அறிவிப்புக்காகவும் இக் கடிதத்தினைத் தங்ககளின் பத்திரிகையில் பிரசுரிக்சு வேண்டுமென வேண்டுகிறேன்

சி. கனகரத்தினம்

தலைவர்/தகவுடைய அதிகாரி
வட பிராந்திய போக்குவரத்துச் சபை

## ஆசிரியர்குறிப்பு:

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரெத்தினத்தின் மேற்படி கடிதம் தொடர்பாக:

160 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகத் தலைவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், காலையில் ஒரு பேருந்தும் மத்தியானம் ஒரு பேருந்தும் மட்டுமே புகையிரத இணைப்புச் சேவைக்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அட்டவணையிடப்பட்ட ஒரு பேருந்து கூடப் புகையிரதம் அரைமணி நேரம் தாமதமாக வந்தாலும், எந்தநோக்கத்திற்காகப் புகையிரத நிலையம் வந்ததோ அதை நிறைவேற்றாமல் திருப்புகிறது. வட பிராந்திய போக்குவரத்து நிர்வாகத்தால் வேறு மாற்று ஒழுங்குகள் செய்ய முடியாதா? மாற்று ஒழுங்குகள் உங்களிடம் இல்லாவிட்டால் நாம் பல மாற்று ஒழுங்குகளைச் சிபார்சு செய்யத் தயாராய் உள்ளோம். புகையிரத தாமதம் இலங்கையில் மட்டுமல்ல தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் உண்டு, புகையிரதம் தாமதமாக வருகிறது என்று சொல்லி உங்கள் கடமையை உதாசீனம் செய்து கொள்ளலாமா?

போக்குவரத்துச் சேவையின் பாரிய பொறுப்பு மக்கள் சேவையாகும். பேருந்து–புகையிரத இணைப்புச்சேவை மிகமிக அத்தியாவசியமானது எக்காரணம் கொண்டும் இச்சேவைகள் இரத்துச் செய்யாமல் செயலாற்ற வேண்டும் என்ற கடுமையான பணிப்புரை அமைச்சினாலும், மத்திய போக்குவரத்து சபையினாலும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், யாழ்ப்பாணத்தில் புகையிரதம் தாமதமானால் பேருந்து புகையிரதப் பிரயாணிகளைக் கைவிட்டு வேறு சேவையில் ஈடுபடுகிறது. இதனால் தனியார்போக்குவரத்து நன்மையடைகிறது. கொழும்பு-யாழ்ப்பாண புகையிரதச் சீட்டு ரூபா 51.50 ஆனால் பிரயாணி புகையிரத நிலையத்திலிருந்து தனியார் போக்குவரத்தில் பேருந்து நிலையம் போகவும் ரூபா 40 செலவாகிறது.

தலைவர் பஸ்கள் இல்லை என்று சொல்வது ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணம் அல்ல.

அதிகாலை 4-45 மணியிலிருந்து 6-30 மணிவரை சாலையில் உள்ள ஒன்றல்ல பல பேருந்துகளை காலை மெயில் புகையிரத இணைப்புச் சேவைகளுக்கு அட்டவணைப் படுத்தலாம். காலை 6-15 மணிக்குப் பிறகு புகையிரத இணைப்புச் சேவைக்குப் பின் அடுத்தது முக்கியமான சேவைகளை அட்டவணைப் படுத்தினால்புகையிரதஇணைப்புச்சேவை பாதிப்பில்லாமல் நடைபெறும். மதியவேளையில் யாழ்தேவியுடனான இணைப்புச் சேவைக்கு பஸ்கள் ஒழுங்காக அனுப்பப்படுவதில்லை என்பதை தலைவர் ஒப்புக் கொள்கிறார்.

எமது விசேட நிருபர், புகைப்படப் பிடிப்பாளருடன் வ. பி. போ. சபைத் தலைவரைச் சந்திக்க முறைப்படி சிருடையணிந்த பாதுகாவலரின் அனுமதியுடன் தலைமைக் காரியாலயத்திற்குச் சென்றார். சுமார் 45 நிமிடங்கள் வரை (சபைத்தலைவருடன் பேசி, அவரைப் படம் பிடித்த பிறகு (அவரது அந்தப் படமும் பிரசுரமாகிறது.)



வெளியேறும் போது, பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் (சிருடையற்ற) ''யார் அனுமதியுடன் உள்சென்றீர்கள்?'' என்று, உள்ளே போய் பேசி, படம் எடுத்து வெளியில் வரும்போது தான் அவர் பாதுகாப்பு ''உசார் நிலை'' அடைந்துள்ளது,

இந் சம்பவம் வ. பி. போ' வ. சபையின் நிறுவாகத்துக்கு ஓர் உதாரணம்'

## இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூரகத்தில் இயுங்கி வந்த இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு நேற்று முன்தினம் முதல் மூடப்பட்டுள்ளது. இதைகொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஊர்ஜிதப் படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவில் கடமையாற்றிய இஸ்ரேலியஅதிகாரிகளும்இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்கள் என்று அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடிவிடுவதென்றும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கடந்த மாதம் 20ஆம் திகதி முடிவு செய்தார்.



## சகல பேச்சுவார்த்

(1 ஆம் பக்கத்தொடாச்சி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ சந்திப்பு ஒன்று சம்

### தடைசெய்யப்பட்ட

## நிறங்கள் கலந்த பண்டங்கள் போதுமக்களுக்கு எச்சரிக்கை

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள நகர்ப்புறங்களிலும், தேர்த்திருவிழா போன்ற நிகழ்ச்சிகளிலும் செய்யப்படுகின்றன.

அண்மையில் அக்கரைப்பற்று நகரத்தில் எடுக்கப்பட்டு

யைப் பூர்த்தி செய்யக் கூடியதாகும். தற்போது இச்சாலைகளில் 160 பேருந்துக்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. 1988, 1989 ஆகிய காலப் பகுதிகளில் எமது சாலைகளுக்கு 78 புதிய பேருந்துக்கள் கிடைக்கப்பெற்றன இவ் 78 பேருந்துக்களையும் தவிர ஏனைய பேருந்துக்கள் 20 வருடத்திற்குக் கூடுதலாக

அனுப்பப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் பேருந்துகள் ரயர்கள் தேவை காரணமாகப் பேருந்துக்கள் சேவையில் ஈடுபடுத்த முடியாமல் நிறுத்தப்பட்டிருந்தன இதன் முக்கிய காரணம் எமது சபைக்குத் தேவையான ரயர்களை களனி ரயர் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாமையே. தற்பொழுது நிலைமை ஓரளவு

தலைவர்/தகவுடைய அதிகாரி
வட பிராந்திய போக்குவரத்துச் சபை

## ஆசிரியர்குறிப்பு:

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரெத்தினத்தின் மேற்படி கடிதம் தொடர்பாக:

160 பேருந்துகள் சேவையில்

மையை உதாசீனம் செய்து கொள்ளலாமா?

போக்குவரத்துச் சேவையின் பாரிய பொறுப்பு மக்கள் சேவையாகும். பேருந்து–புகையிரத இணைப்புச்சேவை மிகமிக அத்தியாவசியமானது எக்காரணம் கொண்டும் இச்சேவைகள் இரத்துச் செய்யாமல் செயலாற்ற வேண்டும் என்ற கடுமையான பணிப்

இணைப்புச் சேவைக்குப் பின் அடுத்தது முக்கியமான சேவைகளை அட்டவணைப்படுத்தினால்புகையிரதஇணைப்புச்சேவை பாதிப்பில்லாமல் நடைபெறும். மதிய வேளையில் யாழ்தேவியுடனான இணைப்புச் சேவைக்கு பஸ்கள் ஒழுங்காக அனுப்பப்படுவதில்லை என்பதை தலைவர் ஒப்புக் கொள்கிறார்.

எமது விசேட நிருபர், புகைப்படப் பிடிப்பாளருடன் வ. பி. போ. சபைத் தலைவ

வர் (சிருடையற்ற) ''யார் அனுமதியுடன் உள்சென்றீர்கள்?'' என்று, உள்ளே போய் பேசி, படம் எடுத்து வெளியில் வரும்போது தான் அவர் பாதுகாப்பு ''உசார் நிலை'' அடைந்துள்ளது,

இந் சம்பவம் வ. பி. போ' வ. சபையின் நிறுவாகத்துக்கு ஓர் உதாரணம்'

பிரிவில் கடமையாற்றிய இஸ்ரேலியஅதிகாரிகளும்இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்கள் என்று அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடிவிடுவதென்றும் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா கடந்த மாதம் 20ஆம் திகதி முடிவு செய்தார்.



நேற்றுக்காலை யர்ழ்: பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற ரிசேர்வ் பொலிஸ் சேவைக்கு ஆள் திரட்டும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகந்தந்த ஆண்களும், பெண்களும்:

### சகல பேச்சுவார்த்

(1 ஆம் பக்கத்தொடாச்சி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ சந்திப்பு ஒன்று சம்மாந்துறை பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை அலுவலகத்தில் நடைபெற்ற போது திரு. காஸ்ரோ பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் அங்கு மேலும் பேசியதாவது:-

''இனக்கலவரங்களைத் தூண்டுவதை நாம் அனுமதிக்க முடியாது.சம்மாந்துறை முஸ்லிம் மக்கள்,போராட்டம் தொடங்கிய காலம் தொட்டு எமக்கு ஆதரவு நல்கியவர்களாகும். ஆனால் அண்மைக் காலமாக சில தீய சக்திகள் இந்த ஆதரவைக் குலைக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விடயத்தில் சம்மாந்துறை முஸ்லிம் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்'' என்றும் கூறினார். (48)

## தடைசெய்யப்பட்ட

# நிறங்கள் கலந்த பண்டங்கள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள நகர்ப்புறங்களிலும், தேர்த்திருவிழா போன்ற நிகழ்ச்சிகளிலும் பரவலாக விற்கப்படும் இனிப்புப் பண்டங்கள், குளிர் பானங்கள் ஆகியவற்றில் தடை விதிக்கப்பட்ட நிறங்கள் கலக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

அண்மையில் அக்கரைப்பற்று நகரத்தில் எடுக்கப்பட்டு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்யப்பட்ட ஏழுவகையான இனிப்புப்பண்டங்களிலும், 'சருபத்' குளிர் பானத்திலும் தடைசெய்யப்பட்ட 'கோழிச்சாயம்' என்றழைக்கப்படும் சிவப்பு, மஞ்சள் வர்ணங்கள் அதிக அளவில் சேர்க்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்பரிசோதனையை மேற்கொண்ட அம்பாறைப் பிராந்திய உணவு மருந்துப் பரிசோதகர் திரு.எஸ். நாகையா இவ்வாறான தடை செய்யப்பட்ட நிறங்சளை, உணவுப் பண்டங்களோடு கலக்கும் தயாரிப்பாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தார்.

பளிச்சிடும் நிறங்கள் கலந்த உணவுப் பொருள்களை உட்கொள்வதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கும் அவர் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். (48)

### ஆஸ்பத்திரி

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்தி வருகின்றது என புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த சுத்திகரிப்புத்தடைக்குகாரணம் இங்கு நிரந்தர சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இல்லாமல் இருப்பதேயாகும் இந்த கிராமிய ஆஸ்பத்திரி பிரசவ விடுதியொன்றைக் கொண்டிருப்பதனால் அங்குள்ள கழிவுப் பொருட்களைக் கூட சுகாதாரத் தொழிலாளர்கள் இல்லாமையால் அகற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உடனடியாக பொது சுகாதார தொழிலாளர் ஒருவரை நியமிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், (15)

### 10 முச்சக்கர

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வாழைச்சேனையில் உதவி அரச அதிபர் திரு கே. வரதராஜா தலைமையில் ஜனாப் பிச்சைத்தம்பி உதுமான் லெப்பை, செல்வன் சின்னத்தம்பி மகேந்திரராஜா ஆகிய இருவருக்கு வழங்கப்பட்டது,

மேற்படி வைபவங்களில் அரசஅதிபர் திரு. ஆர். யோகநாதன், உதவி சமுக சேவைகள் அத்தியட்சகர் திரு. இராதியாகராசா, மாகாண புனர்வாழ்வுத்துறை அமைச்சுச் செயலாளர் திரு. ஏ. கே. பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (37)

### மூன்று

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வேலைகள் முடிவடைந்து வந்தன.

தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதால் இதன் நேரத்தை நீடிக்குமாறு பொதுமக்கள் கேட்கின்றனர்.

இதுகுறித்துத் தபால் கந்தோர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது மூன்று மணிக்குக் கணக்கு முடிக்க வேண்டும். அதனால் இந்த முத்திரைகள் வழங்கப்படமாட்டாது எனத்தெரிவித்தார்.

### காந்தியத்தின், . . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இந்தியப்படைகளை எதிர்த்து நாம் தர்மயுத்தம் நடத்திய வேளையில் எம் மக்கள் தந்த பேராதரவு உறுதியோடு எம்மைக் களத்தில் நிற்க வைத்தது, ஏற்றுக்கொண்ட இலட்சியத்திற்காக தம் இன்னுயிரை ஈர்ந்துவிட்ட போராளிகளினதும் பொது மக்களதும் புதை குழிகளின் மேல்தான் நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துநிம்மதியாக நடந்து திரிகின்றோம். அந்த தூய உள்ளங்களின் தியாகங்கள் வீணாகி விடக்கூடாது.

மாவீரன் விக்ரர், கரும்புலி கப்டன் மில்லர் தியாகி திலீபன், அன்னை பூபதியென ஆயிரக்கணக்கான வீரர்களும் பொது மக்களும் என இழப்புக்கள்தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. போராட்டம் இன்னும் ஓயவில்லை.

முழங்காவில் பொதுவிளையாட்டுத்திடலில் நடைபெற்ற மேற்படி விழாவில் புலிகளின் பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு சாமும் உரையாற்றினார்,

பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து கவிஞர் த. நாகேஸ்வரன் தலைமையிலான ''அன்னையே உன்னை அஞ்சலிக்கின்றோம்.'' என்னும் கவியரங்கமும் கலை நிகழ்ச்சிகளும்இடம்பெற்றன. (60)

### வடக்கு கிழக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கையில் முதலமைச்சர் கருணாநிதி அமைதிப் படை இலங்கைத் தமிழரைக் கொல்வதற்குப் பயன்படத் தொடங்கியதிலிருந்து அது தேச நலனுக்காக நடந்து கொள்ளவில்லை என்றும் இது இந்தியாவிற்கு ஒரு வியட்னாம் என்றும் சொல்லியிருந்தேன் எனவும் தெரிவித்தார்.

மேலும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக எல்லையைக் கடந்து செல்வது மீனவர்களிடம் வழக்கமாக இருந்து வருகின்றது. விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட அண்மைக்காலசம்பவங்கள் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

அமைதிப்படையின் நண்பர்களுக்கும் அவர்களுடன் ஒத்துழைத்தவர்களுக்கும் இந்தியாவின்முன்னைய அரசு தாராளமாக ஆயுதங்களைக் கொடுத்தது ஆனால் தேசிய முன்னணி அரசு பதவி ஏற்றதன் பின்தான் இவை நிறுத்தப்பட்டது எனவும் தெரிவித்தார்.

### கவனருக்காகக்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்பாடுகளை செய்திருந்தனர் அதிகாரிகள் கவணர்க்கு காண்பிக்கவென கடந்த பங்குனி மாத இறுதிவரையான அறிக்கைகள் பலவற்றை ஆயத்தமாக வைத்திந்தனர். (லோ)

### நம்பாதவர்களை

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ரனை மக்கள் ஆதரிக்கவில்லை என அங்குள்ள சில பத்திரிகைகள் எழுதின. ஆனால் உண்மையில் எந்தத் திராவிட இயக்கமுமே தேர்தல் களத்தில் தமிழீழ விடுதலை பற்றிப் பேசவில்லை. அதனால் காங்கிரஸ் காரரும் அதற்குப் பதில் சொல்லவில்லை எனவும் தேனிசைச் செல்லப்பா தெரிவித்தார்.

தமிழுக்கு, தமிழ் இனத்திற்கு என்கின்ற போது அரசியல்வாதிகளால் அது திசை திருப்பப்பட்டாலும் உணர்வுள்ள தாயகத் தமிழ் நாட்டு மக்கள் இன்னும் தலைவர் பிரபாகரனின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

### துறைமுக விருத்தி

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பற்றி ஆராய்வதற்கே இவ்வதிகாரிகள் அங்கு வருவதாக யாழ்ப்பாண சுங்கத் திணைக்கள அத்தியட்சகர் தெரிவிக்கிறார்.

இந்திய அதிகாரிகள் இத்துறைமுகத்தைப் பார்வையிட்டதும் அவர்களின் அறிக்கையைக் கொண்டே பயணிகளின் பாதுகாப்பு பற்றி குறிப்பிடப்படும் எனவும் தொடர்ந்து இராமானுஜம் கப்பல் சேவை பற்றியும் குறிப்பாக தெரிவிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தலைவர் பிரபா

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பாக கடிதம் அனுப்பியதாக திரு. பாலகுமாரன் தெரிவித்தார்.

அண்மையில் ஈரோஸ் இயக்கம் பற்றி தலைவர் பிரபாகரன் தெரிவித்த சில கருத்துக்களையடுத்து மீண்டும் ஒரு கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டதாகவும் திரு.பாலகுமாரன் மேலும் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்குமான இச்சந்திப்பு மீண்டும் தொடரும் எனத் தெரிவித்த அவர் இதன் மூலம் இரு இயக்கங்களுக்கும் இடையில் நல்லுறவு மேலும் வளர வழிவகுக்கும் என்றும் அவர் சொன்னார்.

### பிறநாட்டுக் கப்பல்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தமும் விதித்தால், இவற்றைத் தடுக்கலாம் எனவும் அவர் மேலும் கூறினார்,

இதே சமயம் கொழும்புத் துறைமுகத்தில் தருவிக்கப்பட்டுள்ள அபாயகரமான இரசாயனப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை அகற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.


அறிவித்தல்

இராசயனவியல்

திரு. மகாதேவா

அவர்களது வகுப்புகள் மீண்டும்

ஞாயிறு 22 - 04 - 1990 முதல்

வழமைபோல் நடைபெறும் எனஅறியத்தருகிறோம்

***BOND INSTITUTES***

யாழ்ப்பாணம்.

***NAGALINGAM INSTITUTES***

திருநெல்வேலி.

வாணி கல்வி நிறுவனம்

சுன்னாகம். (b/807)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்தில்லுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் -21ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது·